உ

திருச்செங்கோடு

செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழ்.

குறிப்புரையுடன்.



(திருச்செங்கோட்டு மலைக்கோபுரம்)

வெளியீடு :—

V. V. C. R. முருகேச முதலியார்,

ஈரோடு.

உ
வேலுமயிலுந் துணை.

திருச்செங்கோடு

செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழ்.

குறிப்புரை முதலியவற்றுடன்.

மேற்பார்வையாளர்
வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்,
தலைமைத் தமிழாசிரியர்,
செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.

*

பதிப்பாளர்
பழநி, ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிருவாகக்
குழுவின் உறுப்பினரும், ஈரோடு, செங்குந்தர் உயர்நிலைப்
பள்ளி நிருவாகக் குழுவின் தலைவரும் ஆகிய
V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள்,
ஈரோடு.

1958.

இப் புத்தகத்தை அச்சிட்டோர் :—

அம்பிகா பிரஸ்,

சிவஷண்முகம் பிள்ளை வீதி,

ஈரோடு.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முகவுரை.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

(கந்தரலங்காரம்.)

பிள்ளைத்தமிழ்.

செந்தமிழ் மொழிக்குரிய பழைய விலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற் கூறப்படும் புறப்பொருள் திணைகள் ஏழனுள் ஒன்று பாடாண்திணை. பாடாண்—பாடுதற்குரிய ஆண்மகனது ஒழுகலாறு. பாடாண் திணையாவது பரிசில் வேண்டிய புலவன் தான் பாடுதற்குத் தகுந்த சிறப்பினையுடைய ஆண்மகன் ஒருவனுடைய புகழ் வலிமை ஈகை அருள் முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதலாம். பாடாண்—தெய்வப் பாடாண் மக்கட் பாடாண் என இருவகைப்படும். இவ்விருவகைப் பாடாணிலும் காமப்பகுதியும் வரும். காமப் பகுதிபற்றிய பாடல்களில் தலைவராக வருதற்குரியோர், கடவுளரும் மக்களும் அவருட் குழவியருமாவர். அக்காமப்பகுதி புணர்ச்சி வேட்கை பற்றியதும் அன்புவேட்கை பற்றியதுமென இருவகைப்படும். "ஒரு மன்னவன் ஊரிலுள்ள பொது மகளிரோடு கூடி ஒழுகும் விளக்கம், புணர்ச்சி வேட்கை பற்றியதென்றும், மகளிர் குழவிகளிடத்துக் கொண்டவிளக்கம் அன்புவேட்கை பற்றியதென்றுங் கூறுவர். முறையே இவற்றை ஊரின்கண்ணே தோன்றிய காமமென்றும் மாதர் மகிழ்ந்த குழவியென்றும்" புறப்பொருள் வெண்பாமாலை பகரும். புணர்ச்சி வேட்கை பற்றிப் பாடும் பகுதிக்குப் பின்னுள்ளோர் ஏழுபருவமாக வகுத்துக் கலிவெண்பாவாற் செய்கின்ற உலாச் செய்யுளையும், குழவியினிடத்து அன்புவேட்கைபற்றிப் பாடும் பகுதிக்குக் கடவுள் காக்கவெனக் கூறும் காப்புமுதல் சிறுபறை யீறாகக் கூறப்படும் பிள்ளைத் தமிழ்ப் பாடலையும் ஆசிரியர் உதாரணம் கூறுவர்.

பின்வந்த புலவர்கள் பிள்ளைத் தமிழின் தோற்றத்திற்கு மூலவித்தாகக் கொண்டது, "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்னும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரமாகும். இச்சூத்திரவுரையில் "குழவிப் பருவங் கழிந்தோர் அது வேண்டியக் காலும் அக்குழவிப் பருவமே கருதிப் பாடுகவென்றும், பரிசில்

வேட்கை குழவிக்கனைன்றி அவன் தமர்க்கன்றுமா மென்றும் நச்சினார்க்கினியர் கூறியுள்ளவை அறிதற்குரியனவாம். இவற்றால் தொல்காப்பியர் கூறிய குழவிமருங்கினமைக்ககாமப் பகுதியை விளக்கி நிற்கும் இலக்கியமாகத் துலங்குவது பிள்ளைத் தமிழென்பது பெற்றாம்.

பிள்ளைக்கவி முதல் பெருங் காப்பியமீறாகத் தொண்ணூற்றாறென்று சொல்லப்பெறும் பிரபந்த வரிசையில் முன்னிற்பது பிள்ளைத்தமிழ். குழவிப் பருவத்தினியல்பினை ஆசிரிய விருத்தத்தால் விரித்துப் பாடுதலின் இந்நூல் வித்தாரகவியின் பாற்படும். பிள்ளைத் தமிழை, பிள்ளைக் கவி பிள்ளைப் பாட்டு என்று முன்னூல்கள் கூறும். இப் பிள்ளைத் தமிழ், "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல். செய்யுளியல் 237) என்று தொல்காப்பியனார் கூறிய விருந்தென்னும் பகுதியில் அடங்குவதாகும். விருந்து—புதிய பாடல்.

உலகியலில் காணப்படும் பிள்ளைப் பருவத்திற்குரிய விளையாட்டுச் செய்திகளை அமைத்துப் பிள்ளைத்தமிழ் பாடப்பெறும். அவை, குழவியைப் பெற்ற தாயரும் செவிலியரும் தம்மருமைக் குழவியைக் கடவுளர் காக்குமாறு வேண்டலும், தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதலும், பொருள் நிரம்பாத மழலைச் சொல் பேசுமாறு வேண்டுதலும், கைகொட்டச் செய்தலும், முத்தந் தருகவென வேண்டுதலும், அவர் சிறுநடை காண்பதற்கு வருக வருக வென்றலும், அம்புலிகாட்டியழைத்தலும் சிறுமியர்களின் சிற்றில் சிதைத்தலும், சிறுபறை முழக்கலும், சிறு தேருருட்டலும் ஆகிய பத்துமாம். பிள்ளைத்தமிழ், ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இருவகைப்படும். ஆண்பாற்குரிய, முற்கூறிய பத்துப் பருவங்களில், ஈற்றிலுள்ள, சிற்றில் சிதைத்தல், சிறுபறை முழக்கல், சிறுதேருருட்டல் என்னும் மூன்றினையும் நீக்கி ஏனைய காப்பு முதலிய எழுடன் மகளிர் விளையாட்டுக்குரிய கழங்கு, அம்மானை, ஊசல் என்னும் மூன்றும் சேர்த்துப் பாடப்படுவது பெண்பாற் பிள்ளைத் தமிழாம்.

சிற்றில் சிறுதேர் சிறுபறை யொழித்து
மற்றவை மகளிர்க்கு வைப்பதாகும்." என்பது

பன்னிரு பாட்டியல்மேற்கோள்சூத்திரம். பிற்காலத்தில் பெண்பாற் பிள்ளைத் தமிழில் நீராடல் முதலிய வேறுபருவங்கள் சேர்த்தும் பாடியுள்ளனர். குழவியின் மூன்றாந்திங்கள் முதல் இருபத்தோராந் திங்களீறாக அமைந்த திங்களுள், சிறந்தனவாகிய ஒற்றித்த திங்கள்களில் காப்பு முதலிய பத்துப் பருவங்களும் முறையே பாடப்பெறும்.

பிள்ளைப் பாட்டின் தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே.

(பன்னிருபாட்டியல்—சூத்திரம் 101)

தெய்வக் குழவிகளையும், மக்கட் குழவிகளையும்பற்றி நம்முன்னோர் பாடிய பிள்ளைத் தமிழ் நூல்கள் பலவாம். அவற்றுள், திருச் செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியன கடவுட் குழவிகளைப் பற்றியன. குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், சிவந்தெழுந்தபல்லவராயன்பிள்ளைத்தமிழ் முதலியன மக்கட் குழவிகளைப் பற்றியன.

செங்கோட்டு வேலவர்பிள்ளைத்தமிழ் கடவுட்குழவியாகிய ஆண்மகவொன்றின் குழவிப் பருவத்துக் குணம் செயல்களில் ஈடுபட்டுள்ள தாயருஞ் செவிலியருஞ் சிறுமியருமாகிய மகளிரின் வேட்கைக் குறிப்புப் புலப்படுமாறு காமப்பகுதிபற்றிப் பாடிய பிள்ளைத்தமிழ் நூல்களிலொன்று. செங்கோட்டுவேலவர் பிள்ளைத்தமிழ், செங்கோட்டுமலையில் என்றும் மாறாஇளமையுடன் விளங்கும் தன்னிகரில்லாத்தண்தமிழ்க்கடவுளாகியமுருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றதாதலின் மிகவுஞ் சிறப்புடையதாம்.

"தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தெனிற்
செய்யுளிற் சிறிதும் விழுமியதாகும்."

(அணியியல் விளக்கம் சூத். 4)

இந்நூல் வன்மையும் மென்மையும் ஆகிய சொற்புணர்ச்சியுடன் ஒளியும் விளக்கமும் பெற்றுத்திகழ்வதால் * இது மூவகைச் செய்யுள் நெறியில், பாண்டிய நெறியினைப்பற்றியதாகும்.

---

* நெறியெனப்படுவது குணத்தொடு கூடிய
சொற்புணர்ச்சியது தொழிலாகும்மே—20
அதுவே—சேரஞ்சோழம் பாண்டியமென்று
முப்பாற் றென்ன விளம்பினர் புலவர்—21
சேர நெறியினைச் செப்புங்காலை
புணர்ச்சி வன்மை சொல்வன்மை நெடுந்தொகை
யெனுமிவை மூன்றினிளமையை யுடையதாம்—22
சோழ நெறியினைச் சொல்லுங் காலை
விளக்கமு மொளியு மேவியதாகும்—23
பாண்டிய நெறியினைப் பகருங்காலை
முன்னவை யிரண்டின் தன்மையதாகும்—24

(அணியியல் விளக்கம். செய்யுட்படலம்)

நூற்பொருள் :— இந்நூலின்கண் முருகக் கடவுளின் தோற்றம், முருகன் அவுணரை யழித்துத் தேவரைக் காத்தது, சிவனுக்கு உபதேசம் செய்தது, இறையனார் களவியலுரை விரித்தது, அகத்தியருக்குத் தமிழறிவுறுத்தியது முதலிய முருகக் கடவுளைப்பற்றிய செய்திகளும், சிவன் அம்பிகைக்குத் தன்னுருவில் பாதியுருவ மீந்தது, சிவபிரான் திருநடனச் சிறப்பு முதலிய சிவனைப்பற்றிய செய்திகளும், மற்றும் திருச்செங்கோட்டு மலையில் உள்ள அதிசயங்களும் கூறப்பட்டுள்ளன. அகத்திணைக்குரிய முதற்பொருளாகிய குறிஞ்சி மருதம் என்னும் நிலங்களையும் அவற்றின் கருப்பொருள்களாகிய, மக்கள் விலங்கு பறவை உணவு முதலியவைகளைப் பற்றியும் ஆசிரியர் ஆங்காங்கே அழகாகக் கூறியுள்ளார். குடகில் மழைபெய்து காவிரியில் புதுப் புனல் வருதலும், மக்கள் மகிழ்ச்சியும், காவிரியாற்றின் இயற்கைவளமும், சோலையினியல்பும், மலையருவியில் அரமகளிர் நீராடுதலும், பூந்துறை நாட்டின் இயற்கை வளமும், மகளிர் காவிரித் துறையில் நீராடற் சிறப்பும், தென்றல் வருணனையும் ஆகிய செய்திகள்பற்றிப் பகரும் பாடல்கள் பன்முறையும் படித்து மகிழ்தற்குரியனவாய்ச் சொல்லினும்பொருளினும் சுவைபட அமைந்துள்ளன.

நூலாசிரியர் :— இத்தகைய அருமையான நூலை இயற்றிய ஆசிரியருடைய பெயர் குலம் காலம் முதலிய வரலாறுகளிலொன்று மறிதற்கியலவில்லை. இது மிகவும் வருந்துதற்குரியது. இந்நூலை நோக்கும் பொழுது, இதன் ஆசிரியர் செவ்வியமதுரஞ் சேர்ந்த தீந்தமிழ்க் கவிஞராக விளங்கியவரென்பதி லையமில்லை.

"பாகைவரு சிவஞான வாரிதிபணிப் பவென்
பாலடைந்தறிவறிவுறீஇச்
செறிதமிழ்க் கலைபல வுணர்த்தி வாழ்வித்துலவு
செந்நா மடந்தை பதுமச்
சீறடி யுளங்கொண்டு முப்பொழுது மேத்துதும்"

(காப். பரு. செ. 7)

என்று கூறுதலின் இந்நூலாசிரியர் பாகையென்னுமூரில் உள்ள சிவன் என்னும் ஞானவாரிதியை வழிபட்டு அவரருளால் ஞானவாணி தன்பால் வந்தடையச்செந்தமிழ் நூல்களை யுணர்ந்து சிறந்த கவிஞராய் வாழ்ந்தவர் என்று தெரிகிறது.

"பேதமை யுறு மலிவன் மீதுரைத் திடுகின்ற
பிள்ளைத் தமிழ்ப் பனுவலின்

பெய்முதாக் குறைவுண்டு கவிராச ராசன்
பெரும்புரா ணச்செய்யுளுண்
டாதரவி னேடுதேர்ந் தின்புற்று வாமுலா
மம்புலீவாட வாவே" (அம். பரு. செய். 2)

என்று கூறுதலால், திருச்செங்கோட்டுத் தலபுராணம் பாடிய கவிராசராச பண்டிதர் காலத்திற்கு இந்நூலாசிரியர் பிற்பட்டவர் என்று தெரிகின்றது.

"முத்தமிழ் முனிக்கருள் செய்புங்கவனை யெங்களரசை"
(காப்பு. 4.)

என்று கூறுதலால் இவர் செங்கோட்டு வேலைக் குல தெய்வமாகக்கொண்ட குலத்திற் பிறந்தவரென்று தெரிகின்றது. இவர் சங்கப் புலவரிடத்தும் ஏனைய தமிழ்ப் புலவர்களிடத்தும், தமிழ் மொழியிடத்தும் மிகுந்த பற்றுடையவர் என்பதைக் கீழ் வருஞ் செய்யுளடிகளா லுணரலாம்.

"பரவுநற் கிரண ரருணகிரி நாதர் மொழி
பாட்டமுத மூட்டு செவியில்" (காப்பு. 2.)
"கஞ்சப் பொகுட்டலர்த் திசைமுகத் தருமறைக்
கடவுணவில் வடமொழி யெலாங்
காதத்தின்மொழியென க்குயிலிசைய வினியமொழி
கருதிமு வருமுணர்கலாச்
செஞ்சொற் றமிழ்க்குறு முனிக்குணர்த் தியவறிஞ
செங்கீரை யாடியருளே." (செங். 2)

வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களில் சிறுபறையை யடுத்துச் சிற்றில் கூறப்பட்டிருக்கின்றது. இந்நூலில் சிற்றிலையடுத்துச் சிறுபறை கூறப்பட்டிருத்தலால், "அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்" எனக் கூறும் பன்னிருபாட்டியல் முறை தழுவி, ஆசிரியர் இப்பிள்ளைத் தமிழ் செய்தாரெனத் தெரிகிறது. காப்புப் பருவத்தில் திருமால்முதலிய தேவர்கள் குழவியைக் காக்கவெனக்கூறிய ஆசிரியர், அர்த்தநாரீசுவரர் காக்கவெனக் காப்புக் கூறாதது யாது காரணம்பற்றியோ? எனின், பிரணவத்தோ ரெழுத்துற்ற பொருள் என்று சிவனையும் அழகிய நாயகியென்று சக்தியையும் காக்குமாறு வேண்டியுள்ளனராதலின் அர்த்தநாரீசுவரர் காக்கவெனவேண்டிற்றில ரென்க.

திருச்செங்கோடு :— இப்பிள்ளைத்தமிழுக்குரிய திருச்செங்கோடு கொங்கு இருபத்துநான்கு நாடுகளில் முதன்மையுற்று விளங்கும் பூந்துறை நாட்டில் காவிரியாற்றின் கீழ்கரை

யிலுள்ளது. இம்மலையுச்சியில் அம்மையப்பராகிய அர்த்தநாரீசுவரர் மேற்கு முகமாகவும், செங்கோட்டு வேலவர் கிழக்கு முகமாகவும் வீற்றிருந்தருள்செய்கின்றனர். இத்தலம் தேவாரம் பெற்ற கொங்கேழு தலங்களில் ஒன்று. திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், சங்கப் புலவராகிய பரணர் முதலியோரால் பாடல் பெற்றது. இம்மலை செந்நிறமாயும், செங்குத்தாயும் உள்ள உச்சியையுடையதால் திருச்செங்கோடு எனப் பெயர் பெற்றது. திருக் கொடிமாடச் செங்குன்றூர், மேலேரகம், ஏரகமலை, நாககிரி முதலியன இத்தலத்தின் வேறு பெயர்கள். கிழக்கிலுள்ள சோழநாட்டில் சுவாமிமலை, ஏரகம் என வழங்குதல் போல, அதன் மேற்றிசையிலுள்ள கொங்கில் இம்மலை முருகனுக்குரிய அழகிய இடமாக விளங்குதலின் மேலேரகம் எனப் பெயர் பெற்றது. இத்தலத்துப் பெருமானைப் பிரமனும் திருமாலும் பூசித்துவழிபட்டதால் இதற்குப் பிரமகிரியென்றும் விண்டுகிரியென்றும் பெயர். உலக முழுவதும் பரவிநிற்கும் சத்தி சிவம் என்னும் இரண்டுருவமும் ஒருருவமாகக் கலந்து காட்சிநல்குவதா லிம்மலை கொங்கிற் கயிலாயம் எனப் பெயர் பெறும். இம்மலை சைவத்தின்சின்னம். கொங்கு நாட்டின் தாயகம். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் முருகனுக்குரியனவாகக் கூறும் சிறந்த தலங்களில் திருச்செங்கோடும் ஒன்று.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா விறைவன்கை வேலன்றே!'

(வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை)

கண்ணகி எறிநின்ற குன்றம் திருச்செங்கோடு என்பர் ஒரு சாரார். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் அதனை மறுத்திருக்கின்றார். "குன்றக் குறவர் ஒருங்குடன் கூடி" என்பதிலுள்ள குன்றமென்பது கொடுங்கோளூருக்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலை. அது திருச்செங்கோடு என்பவாலெனின் அவர் அறியார்! என்னை? "அத்திருச்செங்கோடு வஞ்சி நகர்க்கு வடகிழ்த்திசைக்கண்ணதாய் அறுபதின்காதவாறுண்டாகலானும் அரசனும் உரிமையும் (மனைவியும்) மலைகாண்குவமென்று வந்துகண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அதுகூடாமையினென்க."

(சிலம்பு. பதிகம். உரை. 3.)

திருச்செங்கோட்டை, நெடுவேள்குன்றமென்னும் திருச்செங்குன்று என்போர் அதற்கேற்ப அங்கு விளங்கும் அர்த்தநாரீசுவர வடிவமே ஒருமுலை குறைத்த திருமாபத்தினியாகிய கண்ணகிதேவியின் திருவுருவமென்பர். அர்த்தநாரீசுவர வடிவத்தில் வலதுபக்கம் முலையில்லாத ஆணுருவம்; இடதுபக்கமே திருமுலையமைந்த பெண்ணுருவம். பத்தினித்தேவி தனக்குத் தவறுபுரிந்த

மதுரை நகரத்தை எரித்ததின்பொருட்டு இடது முலையை வலக் கையால் திருகிவிட்டெறிந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

"யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் பிழைத்தேன் குற்றமி லேன் யானென்று
இடமுலை கையாற் றிருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டா ளெறிந்தாள். (சில. வஞ்சினமாலை. 41—46)

இடதுபக்கம் முலையுடைய அர்த்தநாரீசுவர வடிவம் இடது முலையிழந்த கொங்குச் செல்வியாகிய குடமலைத் தெய்வத்தின் பத்தினிப் படிவமாவ தெப்படியோ?

திருச்செங்கோட்டைப்பற்றிப் புலவர்கள் பாடிய பழைய நூல்கள் பலவுள்ளன. திருச்செங்கோட்டுக்கோவையும், மற்றொருபிள்ளைத்தமிழும், குறவஞ்சியும், வண்ணமும், பதமும் காதலும் முதலிய நூலகள் அச்சியற்றப்பெறுதவை.

திருச்செங்கோட்டுத் தலவுரிமையாளரும், தமிழருமையும் தமிழ்ச்சுவையுமுணர்ந்து, தமிழினிடத்தும், தமிழ்ப் புலவர்களிடத்தும் மிகுந்த அன்புள்ளவரும், தமிழறிஞரும் ஆகிய **உயர்திரு, ஈரோடு V. V. C. R. முருகேச முதலியார்அவர்கள்** தமது மூத்த பிள்ளையாகிய, **திரு. ஷண்முகவடிவேலுக்குத் திருமதி, கந்தமணியை** 8—6—58-ல் பழனித் திருவாவினன் குடியிலுள்ள தமது **கணபதி இராமலிங்க நிலையத்தில்** திருமணம் செய்வித்தபின்னர், கொங்குநாட்டு மரபுப்படி மணமக்களுடன், திருச்செங்கோட்டுமலைக்கு ஆண்டவனருட்காட்சியின் பொருட்டுச் சென்றிருந்தார்கள். ஆங்கு இறைவன் திருமுன் அத்தலத்து அருச்சகர்களில் ஒருவராகிய **ம. சுந்தரக் குருக்கள்** அவர்கள் பாடிய **செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள்** சிலவற்றைக் கேட்டின்புற்று, "தாம் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருத்துடையவராய் அந்நூற்பா முற்றுமடங்கியதும், சுமார் முப்பத்து மூன்றூண்டுகளின் முன்பு அஷ்டாவதானம் முத்துசாமிக் கோனர் அவர்களால் அச்சிடப்பெற்றதுமாகியகாகிதச்சுவடியொன்றை என்பால்தந்து, சுவைநிறைந்த விட்பிள்ளைத் தமிழ் நூலை விரைவில் பரிசோதித்து அச்சிட வேண்டுமென்று தெரிவித்தார்கள்.

அச்சுவடி அப்படியே அச்சிடுதற்கியலாத நிலையில் பிழைகள் மலிந்தும், சிலவிடங்களில் பொருந்தாத பாடங்களுடையதாயுமிருந்தது. ஆதலின், அதனுடன் திருச்செங்கோட்டுப்


பிள்ளைத் தமிழ் எட்டுச் சுவடிகளில், அப்போது என் கைவசமிருந்த திருச்செங்கோட்டு நல்லைய வாத்தியார் வீட்டுப் பிரதிகள் இரண்டினையுங்கொண்டு பரிசோதித்துச் சிறு குறிப்புரையொன்று மெழுதிப் பின்னர்ச் சேர்த்துள்ளேன். எனக்குள்ள ஒழிவுநேரங்களில் விரைவாக இந்நூற்பதிப்பு வேலையைச் செய்ய வேண்டியிருந்தமையால், இந்நூல்பற்றிய பலவகைச் செய்திகளை விசாரித் தறிதற்கியலவில்லை. என்பாலுள்ள அன்பு காரணமாக இந்நூற் பணியில் என்னை ஈடுபடுத்தி இந்நூலை அச்சிட்டுதவிய கலைவிநோதரும், கொடைவள்ளலுமாகிய, திரு. முதலியாரவர்கட்கு எல்லா நலன்களும் மேலும்மேலும் உண்டாகவேண்டுமென்று செங்கோட்டுவேலவர் திருவடிச் செந்தாமரைமலர்களைச் சிந்தித்து வந்திக்கிறேன்.

இங்ஙனம்,

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணி,

தலைமைத் தமிழாசிரியன்,
செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு.

3—10—58.





திருச்செங்கோடு செங்கோட்டுவேலவர்.

உ

வேலுமயிலுந் துணை.

செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழ்.

பாயிரம்.

ஆசிரிய விருத்தம்.

விநாயகர் துதி.

நீர்கொண்ட செஞ்சடைக் காட்டினிற் சுட்டபிறை
நிலவுகுருகுந்திவலைவெண்
ணித்திலஞ் சொரிவதென வமுதொழுகு சீகர
நெடும்பாந்த ளுகர விதழித்
தார்கொண்ட தோண்மிசையி னேறிநின் றதுகண்டு
தறுகணூற் றிடர்கரவெரீஇத்
தரங்கவா னதிபுக் கொளிப்பவிர் மூரல்புரி
தந்தாவளத் துதிப்பாஞ்
சூர்கொண்ட செங்கைவே லனகசக வல்லியின்
றெருல்விலை விடுப்பவே திருஞ்
சோரனுடல் போழ்ந்துயிர் கவர்ந்துமெய் பனிப்புழக்
கோதைதன் றுயரகற்றிக்
கார்கொண்ட சூன்மழை கடுப்பக் கடைக்கணூற்
கருணைவெள் ளங்கொழிக்குங்
காங்கேய னைப்பணி கிரிக்கிறையை வாழ்த்துமென்
கவிகணறொடா றுத்தழைப்பவே. (1)

அவையடக்கம்.

வார்புனற் கங்கைபணி திங்களணி யெம்பிரான்
மகுடகோ டீரத்தின்மேல்

வைத்தபொற் றாமரைச் சிற்றடித் துணைநினை
வழுத்துதமி ழுள்ளுமன்பன்
ஏரெழு பதச்சேறு மயிடக்க ரும்போத்தி
விருகுளம் பெறிகுழம்பு
மெழில்கெழுமு பைந்து னைனைக்குபின் பின்சென்ற
தேய்க்குமறை முதுவ னின்ற
பார்மிசைத் தென்மொழித் தமிழ்முறை விரித்தமுனி
பாணர்முத லாம்புலமையோர்
பாவலற் றெனு ரருணகிரி நாதர்மொழி
பாட்டமுத முட்டு செவியிற்
சீர்பரவு செஞ்சொலின் றிச்சிறிய புன்சொலாற்
சிற்றறிவி னன்சொற்றமிழ்
தீங்கடு வருத்தியது பூங்கடம் போங்கிவளர்
இன்புயக் குமரேசனே. (3)

முதலாவது

காப்புப் பருவம்.

திருமால்.

திருவுறை செழும்பதும மார்பினிற் றேங்கலும்
திருத்துள வலங்க றாக்குஞ்
செங்கண்மா லைப்புவன மெங்குளபல் லுயிர்களுஞ்
சிந்தைதள ராது கருணை
யருள்விழி பொழிந்துண் டுறங்கும் படிக்குநின்
றகிலம்பு ரக்கு மிறையை
யஞ்சனமி லஞ்சகரு மஞ்சனவி சஞ்சலதி
ரஞ்சனனை யஞ்சலிப்பாம்
முருகவிழ் கதம்பமஞ் சரிதுதைபு யீராறு
மொய்ம்புமுறை தங்குபடையு
முழுமதிய மாறனைய திருமுகச் சோதியு
முழுக்கருணை விழிமூனான்கும்

பொருகய லிரண்டணைய விழியுமை யிடத்தவளை
பொங்கத் தவழ்க்குமால்
பொதிநிலவு கொப்பளிக் கும்புனிற் றின்மடப்
புதல்வற் புரக்கவென்றே. (1)

பிரணவம்·

அறுபதப் பொறியுடற் சுழல்விழி வரிச்சிறைய
வரிபிடரின் ஞிமிறு குமுறி
யம்போ ருகச்செழிய நான்முகை முறுக்கவிழ்த்
தலராப்பி லிற்றுநறை யுண்

டொறுமிசைத் தொழில்பயின் றுடகப் பூண்மினார்
துணைவிழி யெனக்க டுக்குந்
தோடலர்க ளாரமிசை துயிலரத் தாத்திரிச்
சூர்ப்பகைவ னைப்பு ரக்க
மறைமுகத் திசைமுகக் கடவுண்மொழி யச்சுருதி
வண்மையுரை புகறி யென்று
வன்சிறைக் கூடத்து வைப்பமான் முதலியர்
மயங்கவிவள் விடையூர்தி நீ
புறமொரு ளுணர்க்கவென வடிகளா யவனடிக்
கோங்குதிரு வடிசூட்டியே
ஒப்பரிய நெறிவேத னருள்செயும் பிரணவத்
தோரெழுத் துற்றபொருளே. (2

நாரிகணபதி.

தான தன தன தான தன தன தான தன தன தாத்தன

கோதைமயினட மாடமழைமுகில்
சோலைதொறுமுழ வார்த்தெழத்
தூமெனநுமலர் கோதுமளியிசை
கோடிசுதியொடு பாட்டயர்
நாகரிமிசை மேவியமதிடர்
நாசமுறவொரு கோட்டடர்

நாரி கணபதி பாத மலருள
நாடிமகிழ்கொடு போற்றுதும்
பாகின்மொழிமலை மாதுகவுரியோர்
பாகமுடையபி ரார்க்கெதிர்
பாரமயின்மிசை யேறிகொடியொரு
பாதிசெல வெழுதாத்திரி
யோகையொடுவல மாகவாவிறை
பூதகருணையி னூற்றமீஇ
போனக பெறுகனி நீயென்முருகனை
பூழிமுறைமுறை காக்கவே. (3)

வேறு-பிரமன்.

கோதண்ட பாணிகெடு நாபித்தடம்பூத்த
கோகனக மலரின் வைகிக்
குலவுபுவ னமுமண்ட பகிரண்ட மூதண்ட
கூடமு மமைத்த தன்கண்
வேதண்ட மதமா முதற்பிபீ லிகைகடை
விரித்தொளிர் சராசரமதில்
மேவுயி ரனைத்தும் படைத்திடு மொருத்தனிரு
மென்பதத் தன்புபுரிவார்
தாதன்டு வெட்சிப் புயாசலனை முக்கணன்
றருபனிரு நாட்டத்தனைத்
தமரவே லைபுகெடுஞ்சூதமுஞ்சூருஞ்
சைலமு மடர்த்த செங்கைப்
போதன்று சத்தியனை முத்தமிழ் முனிக்கருள்செய்
புங்கவனை யெங்களரசைப்
பொறிபடப் பணிகிரியின் வாமபா கத்திறைவி
புதல்வற்புரக்க வென்றே. (4)

தேவேந்திரன்

வேறு

தனதன தனதன தனதத்த தத்தனன

கரைகவுள் மதமலை பருவிக்கெ திர்த்திகல்செய்
களிறூ டவிவரு ககனத்த வர்க்கிறையை
வரைசிற கரியுமோர் வயிரத்த டக்கையனை
மகிழ்வினொ டனுதின மனதிற்றுதித்தெழுதுங்
குரைகட லகடுகி ழியவிட்ட சத்திகொடு
குலகிரி யொடவுணர் குலமுட்கி டச்சமர்செய்
சரவண பவனைவி ணமரர்க் கருட்கருணை
கருமழ குழவியை யினிதிற் புரக்கெனவே. (5)

கார்த்திகை மாதர்கள்.

வேறு

விண்முக டளந்தக டுழக்குஞ் செழுஞ்சாலி
விளையுங் குரற்கற்றைமா
மேருவரை சூழ்வருந் தபனனிர தத்திட்ட
விற்பசுந் தூக்க நிகராப்
பண்முக மிழற்றளி துவைத்தபைம் பொற்றுது
பாசடையின் மிசையுதிர்க்கும்,
பரூஉக்கருங் கோட்டசுர புன்னைசெறி பணிமலைப்
பரன்மதலை யைப்புரக்க,
மண்முதல் வழங்குமிரு நூற்றொ டிருபானான்கு
வகையபுவ னத்துயிரெலாம்
வழிவழிபயந்தினந் தெருளாத கன்னியாய்
வளர்சரவ ணப்பொய்கை யின்,
கண்முகை யவிழ்க்குஞ் சரோருகப் பாசிலைக்
கண்பயர் திடவருவர் போய்க்,
காலையினெடுத்துமுலை யமுதருத்திப்பொங்கு
கருணைமொழியனை களிப்பே. (6)

நாமகள்.

மறிதிரைக் கார்க்கட லுடுத்தபார் கண்டமுது
மான்மகற்குறுதலைவியாய்,
வாலிதழ்ச் சததளத் தம்புயத் திடைவந்து
வண்கலை யணைத்துமோர்ந்து,
பரிதலைக் கண்டகர்த நாவகன் றனடி
பழிச்சேத்து நாவதிந்து,
பாகைவரு சிவஞான வாரிதிபணிப்பவென்
பாலடைந்தறிவறிவுறீ இச்,
செறிதமிழ்க் கலைபல வுணர்த்திவாழ் வித்தலவு
செந்நாமடந்தை பதுமச்,
சீறடி யுளங்கொண்டு முப்பொழுது மேத்துதுஞ்
செங்கோட்டு வளர்குமரனைப்
பொறிமயிற் பரியூர்விசாகனைக் கந்தனைப்
புத்தேள்வ லாரி பரவும்,
புதுமலர்ப் பதயுகள வரககிரிமுருகனைப்
புனிதனைக் காக்கவென்றே. (7)

அழகு நாச்சியார்.

வேறு.

தனதன தானன தனதத்த தத்தன

புகலிட நீயல திலைமற்று னக்கெதிர்
புகலவு நாவிலையெனவுட்கி மட்கிடு,
பொழுதினில்வாலுளை யரியுற்றிகைத்திகல்
புரிகுவன்யானென வெழுமுற்கதத்துட,
னகல்புவி வானுல கடையச் செருச்செயு
மார்முனேடி வென்னிடமுத்தலைக்கழு,
வடல்பயில்தாருகன் மருமத்தழுத்திய
வழகிய நாயகியடியைப் பழிச்சுதும்,
முகில்புரை மேனியள் வெளெயிற் றாக்கிதன்
முலையிணை நாசியு மரியச்சினத்தொடு,

முனைகா நூடனைடன்முச் சிரத்தவன்
முடியறவோர்களை முடுகித்தசச்சிர,
னகலமு நீடனுசனுமிக்க புத்திர
ரனைவருமாருயி ருகவெற்றிகட்டபன்,
னவர்பணிமாதவனரிசக் காக்கா
னழகிய கேசவன் மருகற்புரக்கவே. (8)

சத்த மாதர்கள் முதலியோர்.

வேறு.

கலைவாணி வராகி கௌமாரி யயிராணி
கண்கண்மூன் றுடைமகேசி,
காத்தளிக் கின்றவை னவியுடன் சாமுண்டி
கழறுமெழுமாத ரோடு
நிலமேவு நால்வகைய முப்பத்துமூவர்க
ணெடும்பொன் னிலக்கடவு ளோர்
நீர்மலி சரோருகத் தாண்மலர்களன்பினெடு
நெஞ்சமக லாது வைப்பாங்
கொலைமேவு காடக் கடாக்கவிழ்த் திழியுங்
குறுங்கவுட்செறிகிம்புரிக்
கூர்ங்கோட்டு வெண்ணிறக் கோக்களி றுவந்தின்ற
கூந்தலம் பிடியையும்பொன்
மலைமேவு திண்புயத் தகலம்புணர்ந்தசிறு
மதலைப் பசுங்குதலைவாய்
மதகளிற்றுக்கிளைய மழகளிற் றைத்தினம்
மகிழ்ந்தினிது காக்கவென்றே. (9)

அஷ்டவயிரவர்

தாற்றுக் குலைக்கதலி நெட்டிலைச் சுருணெடுந்
தாழைப் பசுங்குரு ம்பை
தவழ்குறுங் காற்பைஞ் சிறைச்செழுந் துகிர்முகச்
சாறுவின் மிசையெடுத்த

நிற்றுப் பசுங்காம்பி னச்சுக் குழற்பொருங்
கிளர்குலைச் செம்பழுக்காய்
கேழொழிய வுண்டைசெய் தமைத்தநொக் கும்பனிக்
கிரிக்குமா லைப்புரக்க
ஆற்றச் செழுஞ்சடை பொருத்தன் கடைக்கா
லைசண்டபதி ரண்டாண்டமீ
தலைத்துயிருமுற்றிட நினைக்குநான்முத்தலைய
வைநுதிச் சூலமேந்தி
வேற்றுப் பருவத்தருவெடுத்தநிரு வாணமாய்
வேதன்க பாலங் கொடு
வெண்பொடி யிமிர்ந்தழ னடக்குந் துணைச்சரண்
வியக்கும்வயிர வரெண்மரே. (10)

தெய்வானை.

வேறு

வாரும் வடமுந்துதைந் தசைய
வளருங் குரும்பைக் களபமுலை
வனசமயர்மண் டபமிருந்த
வனிதையுறையு நகரத்துளபத்
தாரு மணியும் பிறழ் மருமத்
தாமோதரன்றன் மருகோனைத்
தரைவெண் மணிமால் வரைவரு சேந்
தனைக்கந் தனைக்குகனைக்காக்கப்
பாரும் விசும்பும் படைத்தளித்துப்
பயின்றுண் டளிக்குமொரு மூவர்
பரிவினுதவும் பெருவரமும்
பகையு நிசிதர் குழுவுமறச்
சீருஞ் சிறப்பு மகபதிக்குச்
செருக்கா னயந்து திருமணஞ்செய்
சிறகட் டவளக் கரிவிதருந்
சிறுமிபெருங்கற்புடைமையதே. (11)

வள்ளிநாயகி.

அழற்கட் பொருந்து நுதற்பெருமா
னசல மயிலுக் கொருபாக
மளித்தற் பொருட்டாற் கயிலைபிரிந்
தணிகூர்கச்சிப் பதிநண்ணிப்
புழற்கட்டிறந்து பணிவரையிற்
போகுநன் றருளச் சிவையவணாம்
புகுமுற் புகுந்து பரன்மலர்த்தாட்
பூசைபுரிவோன் றனைக்காக்கக்
குழற்கட்டுவர்ச்செவ் வாய்மடுத்துக்
குழக்கன் றினங்கா லிடாநிரையுங்
குழுமிக் குழுமிச்செவிமடுப்பக்
குறிக்குஞ் சாதா ரியைமதலை
நிழற்கட் சிறந்தோர் பதங்குனித்தக்
நிலைநின் றிசைப்போன் றிருவுதர
நீத்துக் குறவர் தழைக்குரம் பை
நிலைப்போ டிருமங் கலநாணே. (12)

வேலாயுதம்.

கடியார்நனைவிண் டொழுகுறும்பொற்
கடவுண்மதலைச் சடைப்பெருமான்
கவுரிக் கொருபா கங்கொடுப் பக்
கலந்தீ ருருவோ ருருவாய்நின்
றடியார்பரவு மபிராமத்
தருள்கூர்ந் தமரும் பிரமநசுத்
தண்ணற் குமரப் பெருமானை
யலந்தோர் துணையைத் தனிகாக்கப்
படியாதெழுந்த மீச்சடையும்
பார்கீண் டிழிந்த கீழிணரும்
படித்தப்படிவக் கொக்கவுணப்
பகையும் பரவைக்குலமுழுதும்

விடியா விருண்மா யைக்கிரியும்
விளிந்துதுகளாம் படியுமையாள்
விதித்துத்தனது திருப்பெயரால்
விதித்துத் தருஞ்செவ் வேற்படையே. (13)

தகர்வாகனம்.

வேறு.

காமர்வெண் டிங்களங் குழவிதவழ் கொடுமுடிக்
கதிர்மணிச் சிகாகூடக்
கணபணக் கட்செவிக் கார்வரைக் கிறைவனைக்
கந்தனைக் குமரவேளைத்
தாமரைக் கண்ணனின் றன்புபுரி பலிகொண்ட
சாம்பவி யிடப்பாகனர்
சார்வுறும்விண்டுகிரி வளர்கார்த்தி கேயனைச்
சண்முகனை யினிது காக்கப்
பூமகன் வழிவந்த காரதப்பேரிருடி
பொருவருங்கிருது வேட்பப்
பொற்பினுயர் பொருவலிய வருமறைத் திருவுருப்
பொலியவங் கழலுதித்துக்
கோமதப்பொருவிவெள்ளம்பரந்திழி
குழுக்களைக்காற்ற முற்கட்
கூற்று மிரங்குடியிருக்கனைய திரிபுரிக்
கோட்டுவெண் டகரின் வலனே. (14)

எழுபெயர்ப் பெரும்பதி.

வேறு.

அண்ணற்படிவப் பசுநிறத்த
லம்பொற்சிமய மடவரல்செப்
பமைத்துப் பணைத்த முதுகூற்கொண்
டடிபாரித்த களபமுலைக்

கன்னுய்த்தரு டீம்பால்பருகிக்
காத்துமூாத்துங் தோன்மீதுங்
கவிக்கு மொருசெஞ்சுடர் மணியைக்
கதிர்வேன் முருகன்றனைக்காக்க
விண்ணாத்துயரும் பிரமகிரி
விண்டுவரைதுற் காசலங்கார்
விடங்கூருரகப் பெருநாகம்
விபுதர் பணியோகங்கோதை
* மண்ணித்தமிழ்மூவரு மொழியுங்
கோடிமாடச்செங்குன்றாராய்
வணங்கித்தொழுவோர் பழவினையை
மாற்றுமெழுபேர்ப் பெரும்பதியே. (15

மலேகாவலர்.

தனஞ தனஞ தனஞ தனஞ தனஞ தனஞ தஞ
அகல்வா னளவாய் நிவர்தா ழையினே
டலர்கே சரமீதெழா
வடர்சோலையினூ டுலவோர் சிறுகா
லணிவீதியின் வாய்புகா
மகடாடவர்மோ கமொடே மகிழ்கூர்
மணநா டொறு மாறலா
வளர்கோ தையுளான் முருகோ னுறைமால்
வரைகா வலராயினேர்
புகல்நீள்கலிநாள் யவனே ருருவே
புனையா தகராயினேர்
புவிமீ தரன்மால் பதிசேரவுமோர்
பொடியா யடுவேலவாய்
மகதே வர்மகாபதியீ தழியா
வருபோ துயிர்போயினர்
மகவா னரசோ டிகலாவுலகாள்
மலேகா வலர் மூவரே. (16)

காப்பு முற்றும்.

---

* மண்ணில் என்பது பிரதிபேதம்.

2-வது

செங்கீரைப் பருவம்.

வேறு.

மைக்குன் றிடைச் செக்கர் வான்பரந் ததனுழை
வயங்கிய சுடர்க்கதிரென
வான்றிருவு மச்சரோ ருகமார்பகத்தின்மா
மணிமாதவக்கடவுளுங்
கைக்குஞ் சாத்துரி புனைத்துவரி யுழுவையதள்
கஞ்சுகி யணிந்தமதலைக்
கடவுளுந்தனியுவப் பக்கருணை வெள்ளமிரு
கட்கடை பொழிந்தொழுகவெற்
பொக்கும் புயங்குலுங் கத்தாளுந்தைத்துவயி
றெக்கி யிருகர முட்டியுற்
றொளிமிகுங் கந்தர நிமிர்த்திதழ் குவித்தம்மை
யுடனொக்க வுலகுப்பவென்
டிக்கும் பாத்திசை விளங்கமணி வாய்விண்டு
செங்கீரை யாடியருளே
செந்திரு வுவந்தபணி மந்தர மமர்ந்தகுக
செங்கீரை யாடியருளே. (1)

வஞ்சப் பெரும்பிணிக் குறுமருந்தேயம்
மருந்துவந் துதவு குணமே
வன்குணக் குரவர்புரி தவமேதவத்தவர்கை
வருபெரும் பேறேயருட்
டுஞ்சுற்ற வப்பே றளிக்குமொரு காட்சியே
சோர்விலக்காட்சி யொளியே
துலக்கரும் பேரொளியினுருவமே யருவமே
சொற்குரியவுருவருவமே
கஞ்சப் பொகுட்டலர்த் திசை முகத் தருமறைக்
கடவுளாவில் வடமொழியெலாங்
காகத்தின்மொழியெனக்குயிலிசைய வினியமொழி
கருதிமு வருமுணர்கலாச்

செஞ்சொற் றமிழ்க்குறுமுனிக்குணர்த் தியவறிஞ
செங்கீரையாடியருளே
செந்திரு வுவந்தபணி மந்தரமமர்ந்தகுக
செங்கீரையாடியருளே. (2)

குடகுவ டிடித்துத் தனிர்த்த சந்தனவனக்
குவியத் துமித்தொடித்துக்
குரும்பலவின் முட்குடக் கனியுடைந் துயர்வரைக்
குறவர்குடில் சூறையாடிப்
படர்சொலை யிபக்கோ டுகுத்தவெண் டாளமும்
பணைவெடித் துமிழ்முத்தமும்
பைப்பணச் சுடிகைப்படப்பாந்தளின்றமணி
பைஞ்சிறை மயிற்பீலியு
மடையவும் வரன்றித் தழைக்குடில் சிறைத்துமழை
யருவிவெள் ளந்திரட்டி
யயலிரு கரைக்குரம் பழியப் பெருக்கெடுத்
தாறலைத் தடவி சாய்த்துத்
திடப்படவரைக்குவ டுளக்குபொன் னித்துறைவ
செங்கீரையாடியருளே
செந்திரு வுவந்தபணி மந்தர மமர்ந்தகுக
செங்கீரையாடியருளே. (3)

குறுந்தாட் குடச்செருத் தற்றிருகு புரிதுணைக்
கோட்டுக்கருங்கவரி வாய்
குதட்டுஞ் செழுந்தா மரைப் பொகுட்டுகுகின்ற
குளிர்முத்தூ றுநுணுகிடைபொரு
திருந்தாழ் குழற்சுமை முலைச்சுமை மிகப்பார
மென்றுநூ புரமி ரங்க
விளமழ வனப்பேடை யெனநனிநடந்துசெலு
மேந்திழைமினார்க ளணியப்
பெறுந்தாழ் வடத்தரள மும்புடவியுடுவிற்
பிறங்கமல நறவுபாய்ந்து
பெய்வளைக் கைக்கடைசி மார்நடப்பருவம்
பிறந்துவிளை செஞ்சாலியின்

செறுதா ளரிந்துபோ ரிடுமே ரகத்தரசு
செங்கீரையாடியருளே
செந்திரு வுவந்தபணி மந்தர மமர்ந்தகுக
செங்கீரையாடியருளே. (4)

துத்திப்பை நாகப் பணைச்சுடிகை யிற்கதிர்ச்
சுடர்மணித் தொட்டிறுயிலுங்
துயிலுணர்ந் திருதா ளுதைக்களவினன்னையுமை
துகில்விலக்கா மொதுக்கிப்
பத்தித்துவர்க்குமுத வாய்மலர்த் தேனெனப்
பங்கயா னனநோக்கி நீ
பசியாகி நின்பெரு விரற்சுவைத் தமுதமெய்ப்
பதைப்பச் சிரித்திதழ்குவிக்
தத்தத் தெடுத்துக் குடங்கையி லணைத்துமுலை
யமுதமுன் பீர்போக்கிமற்
றருத்திக் களத்திடை யழுக்குத் துடைத்துமீன்
டணையாடை மீப்படுத்தச்
சித்தக்களிப்புடன் விளையாடு சிறுமதலை
செங்கீரையாடியருளே
செந்திரு வுவந்தபணி மந்தர மமர்ந்தகுக
செங்கீரையாடியருளே. (5)

வேறு

அறுகாற் சுரும்பாற் குடைந்தமுகை
யவிழ்க்குஞ் சடைப்பா சடைக்கமலத்
தலர்வாய் பிலிற்றுஞ் செழுந்தேற
லகல்வா ளிடுவிற்கொருகணைவாய்க்
குறுகால் கிளைத்துவளர் கணையின்
முற்றிற்பரந்த பசும்புனிறை
துணைத்தா ளுழுநர் குயத்திட்டுஞ்
சுரிசங் கிழ்த்து வரம்புதத்தி
மறுகா நடவுநடுஞ்சேற்று
வயலிற்புகுந்து முடிபுனைந்து

பசும்புனிறை, பி. ம்.

வழிந்துபெருங்கால்வழிமடுப்ப
மலர்த்தண் டலையி னறைமுகந்து
சிறுகானடக்குந் தமிழ்க்கோதைச்
சேயேசெங்கோ! செங்கீரை
தேவர்க்கமரா பதியளித்த
தேவேசெங்கோ செங்கீரை. (6)

வார்க்குங் குமக்கோட் டிளமுலைக்கு
மலர்ப்பூம் பிணையற்கருங்குழற்கு
மருங்கு றுவண்டு றுடங்கிடவே
மழவோ திமம்பி னடைபயில
ஆர்க்குஞ் சிலம்பு சிலம்பமணி
யணிமே கலையின்மணியலம்ப
வசைந்து சிறுகாற் பொசிபொலங்கொம்
பன்னர் மறுகி னடைபெயரப்
போர்க்கின் றெழுநற் கிருஞ்சிலைவேள்
புறப்பா டெனமுன் றாதுணர்த்தல்
போலுமறுகாற் கருஞ்சுரும்பர்
புரிபாண்மடவா ரியற்றிசைநேர்
சேர்க்குந் தமிழ்க்கோ தைப்பதிவாழ்
சிறுவா செங்கோ செங்கீரை
தேவர்க் கமரா பதியளித்த
தேவே செங்கோ செங்கீரை. (7)

வேறு

விரிக்குங் கலபப் பைந்தோ கையின்மணி
மிடறுப ழுத்தனைய
மிளிர்பா சொளிமர கதமக ரக்குழை
மென்கா தூடாட
நெரிக்குஞ் சிறுகுஞ் சியினணி சுட்டியி
னெற்றித ழைந்தாட
நிலவுமிழ்மதிமுகமண்டல மோகையி
னிகழ்புன்னகையாட

வரிச்செங்கமல விழிந்துணை கருணை
வழிந்துபெருக்காட
மார்பிடை தவழும தாணியோடங்கத
வாகு வளைக்காட
வரிக்கிண் கிணியரை ஞாணொலி பாடிட
வாடுக செங்கீரை
யாரணநூல்பயி லேரகநாயக
னாடுக செங்கீரை. (8)

பொங்கர வத்தொளி பூத்தப ணாமணி
புதுமழவெயி லுறழப்
பொதிபூ ணெடுக்கவெஞ் சுரிமுகவால்வளை
புணர்முதிர் குலுவளையா
வங்க ணெடும்புவி யீன்றிடு வெண்டர
ளத்தொளி நிலவுமிழ
வளையொர் பதத்தெழு பரிதியுமதியு
மகன்றுயர் தண்டலையிற்
றங்கிருள்சிப்ப நறும்புனல்வாவிச்
சலசக்குவளை முகை
தளியவிழ் தரவு ளயிர்த்திட மால்வரை
தலையிய புதுப்புனனீ
ரங்கரை மோதுபொன் னித்தண் டுறையின
னாடுகசெங்கீரை
யாரணநூல்பயி லேரகநாயக
னாடுக செங்கீரை. (9)

கண்டன் முடிக்கலை தருமுண் மருங்கிதழ்
கமல மலர்க்கிழவற்
கரிகூறியகொடு முனிவொடகற்று
கறைக்கிரி வப்பெருமான்
துண்ட மதிப்பிளை வண்டுழு கொன்றைத்
தொடர்வெ ளிணர்ப்புன்னை

தொக்குநெருங்கியசெஞ்சடைமூடு
துளும்பி யலம்புநுரை
மண்டுதிரைப்புனன் மந்தாகினிநதி
வந்த வடித்துணையம்
மாவெலி முன்றிலிரந்துநடந்து
வளர்ந்தநெடும்படிவத்
தண்டமலர்த்திகல் கொண்ட வனன்மரு
காடுக செங்கீரை
பாரணநால்பயி லேரக நாயக
னாடுகசெங்கீரை. (10)

செங்கீரை முற்றும்.

ஆகச்செய்யுள் 28

3-வது

தாலப்பருவம்.

வேறு.

வெளிவான் றடவும் பசுங்கமுகின்
மிடறுகிழிக்குஞ் செழும்பாளை
மேருவலஞ்சூழுறுங்கதிர்கால்
விகர்த்தன் பசுங்கொய்யுளைப்புரவிக்
கொளிர் சாமரையின்புடை யிரட்ட
வுடுவெண் மதிபோழ்ந் துடைந்தமுத
மொழுகல் போரத்தா ழையின் குரும்பை
யுடைத்துச் சிறுபுன் குரங்கயில
அளிபாண் மிழற்றுந் தண்டலையூ
டலர்வா வியின்மீன் றாண்டிலறுக்
தகல்வான் வெடிபோந் திழிமறுகி
னரம்பைக் குலைப்பைங் கனியூழ்த்த
தெளிதே னலவ னயில்கோதைச்
செவ்வேள் காலோ தாலேலோ

செங்கோட் டிறைவா மங்கையுமை
சிறுவா தாலோ தாலேலோ. (1)

பண்டைப் பழநான் மறைகளிற்றும்
பதியின் பசுபா சமுமாக்கி
பணைப்பாத்தளின்மோட் டிருந்துட்டுப்
பரிக்கும்புவனமனைத்தினுளுங்
கொண்டப் படிமுன் றொடர்பாசக்
குறிப்பின்வழிபக் குவாகிக்
குணமு திறமும் பலவழியாய்க்
கூறுஞ்சமயர் தமின்மயங்கக்
கண்டிக் கருமா மறைக்கிழவன்
கடிபுக்கிடவைத் தெவருளத்துங்
கருதற்கரிய பொருட்பணிப்பூட்
கடவுட்குரைப்பத்திருவுருவங்
கொண்டப் படிவந் தெனையாண்ட
குழகா தாலோ தாலேலோ
கோதைப் பதிக்கும் பரங்கிரிக்குங்
கோவே தாலோ தாலேலோ (2)

நறவு கமழ்முட் டாட்கமல
நாட்போ துகுத்த பசுந்தேற
லூதக் கடக்கி லுவட்டெடுத்து
நறைக்கானடவு வளர்த்தயலிற்
புறவுபாத்த சடைப்பழுத்த
புறமுட் கனியூழ்த் தழிகடிநீர்
புணர்த்தூற் றெடுக்கும் பெரியாறு
புடையிற் கருங்காற் கழைசாடிச்
சுறவு முகந்து வாய்மடுத்துச்
சுவைத்தன் டகத்துக் களிபெருக்கிச்
சுரிசங் குடைத்துப் புதுப்புனனீர்
துறைசேர் பொன்னிக் கலவமலைக்

குறவாயினீர் நறைகெழுமுங்
கோதைப்பதியாய் தாலேலோ
கொடிமா டச்செங் குன்றூரா
குமரா தாலோ தாலேலோ. (3)

புழைமா நடக்கைக் கறைபடிக்கும்
புரிக்கோட் டயிரா பதப்பாகன்
புரிபே ரரசு கெடும்பதியும்
பொலிவு மிழந்து குடிபுகுந்த
முழைவாய் பொருவுஞ் சிறைக்கூட
மூரிக் கதவன் றாட்டிறந்து
முன்னைப்பதியும் பேரரசு
முடியுங் கொடுப்ப வவன்பணிவுற்
றிழைபூண் டுவள்குங் குமச்செழுஞ்சே
றெக்கரிடுபொற் கலசமுலை
யேலக் குழற்பூம் பிடியைநல்க
வியைந்து மணங்கூர் குழகவளந்
தழைபூந் துறைநாட் டவர்தொழும்பொற்
றுளாய் தாலோ தாலேலோ
சற்பகிரியாயதற்ப விடைத்
தையன் மதலாய் தாலேலோ. (4)

அலர்பூந் துணர்க்கற் பகநாட்டிற்
கரசபுரியுஞ் சதமகத்தோ
னவுணர் வலத்தா லீடழிவுற்
றம்பொற் கிரியைத் தனிக்குனித்த
சிலையான் கயிலையடைந்திரப்பச்
செங்கைப்பரசோனிந்தியத்தைத்
தேவர்க் கிறைவன் காத்தளிப்பச்
செழுமா தவர்பன் னியர்க்குதவ
நிலையா வகழ்நீர்ச் சரவணத்தி
னேர்ந்து பயந்து தமினகல
நிமலையெடுத்து முலையருத்தி
நிவர்தாளுடல்கை வரவளர்த்து

தலையா றிருமூ விரட்டியுறக்
        தடக்கோண்முதலே தாலேலோ.
சங்கத் தமிழ்தேரியற்கோதைத்
        தலைவா தாலோ தாலேலோ (5)

வேறு.

வண்ட லிழைத்திடு தண்டுறையிற்புனல்
        வழியிற் சுழியிற்றே
மாநிழ லிற்கமு காடவி யிற்குளன்
        மான்மத கிற்கயலே
தெண்டிரைபெற்றி வழிந்த புலிற்பொசி
        செஞ்சா லிச்சினையிற்
தேமலி வாசப் பூமலிவாவிக்
        இன்கரை யிற்றரையிற்
பண்டெரி வண்டுக ளுண்டு திரண்டெழு
        பைம்போ திற்றுகிற்
பதுமத் தலிரிற்சினைமுற்றமுடப்
        பணிலக் குழுவெறித்
தண்டா ளஞ்சொரி யும்பொனி நாடா
        தாலோ தாலேலோ
சற்ப கிரிக்கும ரப்பெருமாளே
        தாலோ தாலேலோ. (6)

சுடர்மணி நான்முறை யுணரும்வ ளஞ்சியர்
        தொல்குடி யிற்றோன்றிச்
சொற்றமிழ் தேர்வுறு பொருணிலைவழுவத்
        தொல்வழு தியர்கோமா
னுடையபி ரான்கோ யிற்படி வாயிலி
        னொருதிரு முறையுப்ப
வளையணி செங்கைய னன்பினர் திணையென்
        றோதிய துணர்வரிதாய்ப்

படர்தமி ழுணர்சங் கத்துறை யாளர்
முதற்புலவோர் வினவப்
பரனரு ளாலுரை பகர்புல வாதண்
பாசடை நளினமலர்க்
கடமலிகோதைப் பதிவளர் முருகா
தாலோ தாலேலோ
சற்ப கிரிக்கும ரப்பெரு மாளே
தாலோ தாலேலோ. (7)

குரவமலர்ந்த பசுந்தண் டலையின்
குளிர்நிழன் மயிலாடக்
குழைதளி ரீன்ற முப்பல லூழ்த்தொளிர்
குடமுட்கனிபீறிக்
கரிய முகத்த முசுக்கலை சூவிள
மந்தி கரத்துதவக்
கண்ணு றிளம்பறழ் சென்றுகை பற்றிக்
கடிதுப றித்துணவும்
பரிவினொ டக்கடு வன்பொலி பொற்சுளை
பற்றியெடுத்துதவப்
பானிறவெகினப் பெடைசே வலுமெதிர்
பார்த்து ளுவந்துநகக்
தரணி பணிந்தெழு கோதைப் பதியாய்
தாலோ தாலேலோ.
சற்ப கிரிக்கும ரப்பெருமாளே
தாலோ தாலேலோ (8)

வேறு.

குரைதிரை புரட்டிநறு முகைக்கரை படுத்துமொரு
குளிர்சரவ ணப்பொய்கையி னேர்கூலங்
குலவரசுகுத்தவிலை தனைபடிவுறிற் பறவை
குடைபுனலுறிற்கயல தாமோர்நாட்
பாவொரிலை மட்பகுதியறல்பகுதியுற்றவது
பறவைகயலுற் றவுடலோர்வேறு

பறவைவெளி பற்றமறு கயல்புன லிழுக்கவது
ளயிர்கொடுறு நிட்டைகெடமாழுக
மருளினெறிகெடுத்துமலை முறையினிடவச்சமொடு
வரைபசவெடிக்கயில் வேல்பாடி
வடிதமி ழுரைத்தமுது புலவனை யளித்துரிய
வரமுமுத விற்சொன்மொழிதாவாது
தரையினடி யர்க்குதவி யருண்மடை யுவட்டியுயர்
தழைபணிகிரிக்கிறைவ தாலேலோ
தலையருவி வெற்பினுயர் குடுமியை யொடித்தவனி
தவழ்வருபொ ளித்துறைவ தாலேலோ. (9)

குளிர்நிழல் பரப்புபொழி னறுமலர்மதுத் துளிகொள்
குறமுகைவெடித்தபுனை நீடாது
கொடிபடு தசைப்புவரி திறமென வடிக்கடிமெய்
குலைபரி புரத்திறனொலிநேர்கூறக்
களிகொடளிபடருமிறு மலர்ததைய நெய்த்தகுழல்
கருமுகிலெனப்பசியவார்தோகைக்
களிமயினடிப்பவிழ வணிதெரு நடித்துலவு
கயல்விழிமடக்கொடிநல் லார்சூழ
பளிதநறை துற்றியெழு முறைமுறையரைத்தொளிறு
பசியநிற முற்றசுண மேமானப்
பணைகளை பறிக்குமன நடைபயி லுழத்தியர்கை
படர்கவடு விட்டுவளர் தேமாவின்
றளிரெதிர் சிவக்கொளிரு முரகசயிலத்தமுது
தமிழுரை விரித்தகுக தாலேலோ
தலையருவி வெற்பினுயர் குடுமியை யொடித்தவனி
தவழ்வருபொ ளித்துறைவ தாலேலோ. (10)

தால் முற்றும்.

ஆகப் பருவம் 3–க்குச் செய்யுள் 39.

4வது

சப்பாணிப்பருவம்.

வேறு.

வரிச்சுரி முகக்குடக் கூன்பணிலமுதிர்குன்
மலிந்துவயி றுளையவோடை
வளர்குளிர் வளைப்புகக் கமடமள் ளற்புக
வளைந்துசெஞ் சாலிபடியப்
பருத்தகத லிக்குலையி னேகக்கனி ¶ யுதிரப்
பலாமுட்புறக் குடக்காய்ப்
பசுங்கனியுடைந்துதேன் கொப்பளிப்பச்செம்
பழுக்காய்க் குறுங்குடும்பு
நெருக்குற வுழுங்கடைஞ ரலம்விடக் கடைசியர்
நெரிந்தச் சமுற்றகல நீ
ணெடுவரா லுகளுந் தடம்பணைவெ ளிடையற
நெருங்குறப்பார்ப்பொடன்னந்
தரிக்குகளி னத்தடஞ் சூழ்தமிழ்க் கோதையாய்
சப்பாணிகொட்டியருளே
சயிலமக ளுக்குமந் தாகினிக் குஞ்சிறுவ
சப்பாணி கொட்டியருளே. (1)

பொருமாறடக்கரிக டாங்கவிழ்த் தனமழைப்
பொங்கருவி தூங்கு குடுமிப்
பொன்னம் பொலங்குவட் டயர்குறவர் வள்ளிப்
புதுக்கிழங் ககழ்தினைற்
றருமா வெனப்பழய முதுகிழங் ககழ்கின்ற
சாரலிற் புண்டரிகந்
தவழ்பறழ்க் கின்னமுத முலையருத் திப்புதர்
தனித்துயிராத்தேம் பழுத்
தொருமா பணைப்பூவு மொருகவட் டுறுவடுவு
மோர்சாய்கை யிற்காயுமற்

¶ விழ—பிம்.

நேர்கிளைக் கனியுமா யும்பர் காட்டுபர்தருவி
னுதவியா னர்க்குமரிதாய்த்
தருமா விளங்குசெங் கோடாளு மொருமதலை
சப்பாணிகொட்டியருளே
சயிலமக ளுக்குமந் தாகினிக் குஞ்சிறுவ
சப்பாணிகொட்டியருளே. (2)

முதுமறைத் திசைமுகப் பதுமபீ டிகையின்மா
முனிவரனுதித்த செங்கேழ்
முளரிப் பொகுட்டுக் தியந்தடம் பூத்துயர்
முராரிமகிடாரிநாகம்
விதிமுறை யியற்றுபலி கொண்டுதனையரையுதவி
மிளிர்வத்தி யாகுன்றமும்
மிகுகுரு குலத்தைவர் விதிகுன்ற முங்கூனன்
மென்கிடைபிலத்துவாரம்
வதிதருஞ் சாரதிக் கென்று மிரஞ்சனை
வயங்குழியு மெக்கைதிருமெய்
வழிவரைஞ் சோதிபெதிர் கூவமுங் கேணியும்
வாவியு மருங்குசூழ்ந்த
ததைவரு நெடும்பாக்க ளங்கிரி யமர்ந்தகுக
சப்பாணிகொட்டியருளே
சயிலமக ளுக்குமந் தாகினிக் குஞ்சிறுவ
சப்பாணிகொட்டியருளே. (3)

குறுகடைப் புறவினுக் குறுசிறைபுக்கவக்
† கொழியங்கோ மகன்பார்க் கொடுங்
கோல்களைக் கரியசெங் கோன்முறை நடாத்தக்
குறுங்கவைக் காற்கரும்போத்
தறுகுளம் பெறிசே தகவா னுதிக்கலவை
புழுவன்ப தத்துணைச்சே
றனதுபரி வட்டகனை யக்கண்டி தென்கொலென்
றள்ளதீ யசரியாய்

† கொழிய, பி—ளம்.

மயவறு குறைக்கன்முன் வருகெதியுரைப்பவம்
மன்னன்லேவ ளாண்டலைவ ளூர்
வன்கலி கடிந்துதிரு வுதவவருள் கூர்முருக
வானிறக்கூர் மருப்புத்
தறுகண்மால் யானைவள ரோகத் திறைவனே
சப்பாணிகொட்டியருளே
சயிலமக ளுக்குமக் காகினிக் குஞ்சிறுவ
சப்பாணிகொட்டியருளே. (4)

கடவுட் கொழுந்தாழை பாளைவிட் டென்றபைங்
காய்க்குலை முறிந்துசிதறக்
கவட்டுக் குறும்பலா ஆழ்த்தமுட் கூன்குடக்
கனியுடைக் கிடவா ழையின்
படுபொற் கனித்தா றுதிர்ந்துவீ ழக்கரும்
பச்சிளங் கன்னல் வேலிப்
படப்பைகீழ் படியத் தடத்துமீன் றாண்டிற்
பறித்துசெடி போய்மீண்டு சென்
றடைநெற் கதிர்ப்போர் துகைத்தயற் சாலிவய
லள்ளற் படுகதி யுகளித்
தாற்றிற் படிந்துபெரு நீத்தத்தி னிருகரை
யலைத்துவரு பொன்னிநாட
தடவுச் சினைச்சூத வனமருவு குமரேச
சப்பாணி கொட்டியருளே
சயிலமக ளுக்குமக் காகினிக் குஞ்சிறுவ
சப்பாணிகொட்டியருளே. (5)

வேறு

மண்டியகார்புவி கண்டவனீடுரு
வங்கொடு வேலைமுநீர்
வந்துபடிந்தற லுண்டுலகுண்டவன்
வண்சொரு பங்கொடுமீ
தண்டமெழுந்து செயுந்தரு மந்தலை
மம்புவியுய்த்திடநின்

றதிர முழங்கி யிழிந்து நெடுங்குள
        ஞெருடு கேணிதடா
மெண்டிரை பெங்குரம்பி யிருங்கரை
        பொங்கி நெடும்புனல்பெய்
இம்பரு மும்பரு மெம்பரு நன்கு
        சிறக்கிட வின்புகழீஇக்
கொண்ட லுலாவிய கண்டலை யோரக
        கொட்டுக சப்பாணி
குரவ மணக்கிடு மரவ கிரிக்கிறை
        கொட்டுக சப்பாணி. (6)

மங்கு றிரண்டு நெருங்கி யிருண்டு
        வளர்ந்து நெரிந்தகுழன்
மண்ட மறைந்து வகிர்ந்து விளஞ்சசி
        வாளுதல் வானின்முழுக்
திங்க ளெழுந்து விளங்கிய வதனச்
        செந்துவர் வாய்த்தாளச்
சிறுமுறு வற்குமிழ் நாசிபணைப்பொரு
        செய்ய தொடிப்பைங்கோட்
பங்கய வங்கை மடந்தையர் பண்ணை
        பரந்து புனற்படியும்
பைங்கள பக்கல வைச்சிசை தகமொடு
        பாட்டளி யின்செங்காற்
குங்கும நாறு தடஞ்சுனை யோரக
        கொட்டுக சப்பாணி
குரவ மணக்கிடு மரவகிரிக்கிறை
        கொட்டுக சப்பாணி. (7)

நவநிதி யேமணி யேயொளி யேபழ
        நான்மறை யின்பயனே
நக்கர் தமக்குப தேச மளித்தரு
        ளுபக மேபுரிவோர்

தவவடி வேயடி போற்றடியார் தம்
வழித்துணையே கருதார்
தங்கண் மனங்கல வாதகல் கின்ற
தனித்தம மேசுடரே
பவகனி நீர்மறை யோர்திரு வீதி
பரிந்து தொழும்புசெய்வோர்
பண்பமருந்திரு வாவணமங்கையர்
பாடல்பயிற்றிடவேழ்
குவலய மும்பர வும்புக ழோரக
கொட்டுக சப்பாணி.
குரவமணத்திடு மரவகிரிக்கிறை
கொட்டுக சப்பாணி. (8)

மஞ்சரி மிஞ்சி மலைந்து மிலைந்து
வளர்ந்துசுருண்ட குழன்
மங்கையர் கொங்கை மதர்த்த தயிர்த்து
மருண்டல மந்தமுகைக்
கஞ்ச முடைந்து வழிந்த நறுந்தெளி
கால்பெரு கிப்புடைசூழ்
கன்ன லலைத்தெழு கோதை வளம்பதி
காவல சேவலவ
மஞ்சு தவழ்ந்திட மீவளர் சேணின்
வலாரியு தைத்தெழுவெண்
மத்த கயப்பிடி பெற்று வளர்த்த
வடுக்குவ டுத்தறுகட்
குஞ்சரி கும்ப முலைத்தை வருங்கர
கொட்டுக சப்பாணி
குரவ மணத்திடு மரவகிரிக்கிறை
கொட்டுக சப்பாணி. (9)

மேக்குற மாலை யெழுந்த குறும்பிறை
மேய வெயிற்றிளமான்
மென்பிணை வண்டு மருண்டன பார்வை
விழிக்குழி கண்ணகடுத்

தாக்குறு தோன்மூலை யவுணமடந்தையர்
        தங்கள மங்கலநாண்
டறிபட மாவுட லெறிபட வேல்விடு
        சமரசி காமணி தேன்
வாக்குறு கும்ப நிரைத்து மலர்த்தொடர்
        மண்ட மலைத்து முது
மங்கையை யன்பினிறீஇ பயில் பாடியுன்
        மாக்கிமெய வெறியயருங்
கோக்குற மங்கைகு யக்கழு வும்புய
        கொட்டுக சப்பாணி
குரவ மணைத்திடு மரவ கிரிக்கிறை
        கொட்டுக சப்பாணி. (10)

சப்பாணி முற்றும்

ஆகப்பருவம் 4-க்குச் செய்யுள் 48.

5-வது

முத்தப்பருவம்.

வேறு

கிழங்குங்கனியும் விளைந்துதிர்க்க
        கிளைகெல் லிடியும் பசுந்தேனுங்
கிளையினேடு மிருந்தயின்முன்
        கிடைக்க வதிதிக் கினியபலி
வழங்குங் குறவர் வதிசாரன்
        மன்னிப் பதினெண் கணத்தவரும்
வருகால் வகையிற் கடவுளரும்
        வணங்கிப் பரவ வளர்கயிலைப்
பழங்குன் றகன்று மலைமகட்கோர்
        பாகங் கொடுப்பப் பலவுயிரும்
படைப்போன் படைப்ப வளிக்கும்விடைப்
        பாக னடந்து வதியமழை
முழங்குங் குடுமிச் செங்குன்றூர்
        முருகாமுத்தந் தருகவே

முருகு கமழும்பசுங்கடம்பார்
மொய்ம்பா முத்தந் தருகவே. (1)

சுழியுந் தியதன் புனற் றடத்துச்
சுரும்பர்பறந்து பாண்மிழற்றிச்
சுழலுஞ் சிறைக்கான் முகைய விழ்ப்பத்
துதையுங்கமலத் தலரினின்று
வழியும் பசுந்தேன் பெருக்கெடுத்து
வரம்பு கடந்து படுகரிடும்
மஞ்சட் பரந்து செஞ்சாலி
வான்றி யெடுத்து வரையருவி
யிழியுங்கெளிறீ ருடன்கலவு
மெழிலே ரகத்துக் கொருமுதலே
யிறைஞ்சுங் கலசக் குறுமுனிவற்
கினிய வியற்சொற் றனிபுணர்ந்து
மொழியுங் கனிவாய்த் தமிழ்மணக்கு
முருகாமுத்தந் தருகவே.
முருகு கமழும் பசுங்கடம்பார்
மொய்ம்பா முத்தந்தருகவே. (2)

சகடு துகள்பட் டிடவுதைத்த
தண்டா மரைக்கட் டிருநெடுமா
லுனே படைத்துக் காத்தளந்தன்
டுமிழ்ந்து மறித்து மளித்ததரை
யகடு கிழித்துச் சடைப்பழுத்த
வமிழ்தி னினிய குடப்பலவி
னழிதே ம்பழுத்த விதழூத
லரிவை மகளிர் கரடகடப்
பகடு பருமத் தகமனைய
பணைமென் முலைக்கட் கறுத்ததெனப்
பரற்கின் கினிவாய்ப் பசுங்காய
பைங்கோங் கரும்பின் பரியமுகை

முகடு பமாக் குயில்கோதை
முதல்வா முத்தந் தருகவே
முருகு கமழும் பசுங்கடம்பார்
மொய்ம்பா முத்தந் தருகவே. (3)

இளைக்குந் துடிநுண் மருங்கிறுமென்
றிருதாண் மணிநூ புரமிரங்க
விறுமாக் கடிப்பா ரித்துவளர்த்
தெழுந்த துணைப்பூண் முலையனுங்க
வளைக்குங் குமிழ்க்கு மறிந்தெறியும்
வரிக்கட் டுணையார் பதம்பெயர்த்து
மழுகு நடிக்கும் புயங்கமலை
வள்ள லிடப்பா கம்பகிர்ந்து
களிக்கும் பசிய கொடித்துணைத்தோட்
கவுரி தளிர்க்கை விரித்தழைப்பக்
கருணைமழைபா ருயிர்தழைப்பக்
கசிந்து விளைக்குஞ் சிறுமூரல்
முளைக்குஞ் சிறுவெண் பிறைகடுக்கு
முகிழ்வாய் முத்தந் தருகவே
முருகு கமழும் பசுங்கடம்பார்
மொய்ம்பா முத்தந் தருகவே. (4)

பனியுந் தயிவெண் டயிர்நேபம்
பருகப்பொதுவர் மகரிருளம்
பதறிப் பிடித்துச் சிறுதாம்பிற்
பாரவுரைக் கறையிற் பிணிப்பீர்த்துக்
தனியுந் தியவான் மருதொடித்துச்
சகடோன் றுதைத்துப் புள்வாயுக்
தாளாற் கிழித்துப் பெரும்பூதக்
தனமுண் பதுபோன் றுயிர்கவர்ந்து
கனியுந் திடவான் கன்றெறிந்து
காடக் கடவா ரணமிறுத்துக்
கஞ்ச னுயிரு மவன்கிளையுங்
கடியுந் திருமாற் கொருமருகா

முனிபுங் கவர்போற் றிடுகோதை
முருகா முத்தந் தருகவே
முருகு கமழும் பசுங்கடம்பார்
மொய்ம்பா முத்தந் தருகவே. (5)

வேறு.

சுருட்டுந் திரைப்பரவை போயாறு படிகின்ற
துறைமுகத் திப்பியினுஞ்
சோதிமுத் தஞ்சங் குமிழ்ந்தமுத் தங்கமந்
சூன்மழை சொரிந்தமுத்தம்
மருட்டுங் கடுப்பையா றாவின்முத் தம்பூக
மடல்விரி களத்தின் முத்தம்
வளர்சாலி யின்சிவை கழைக்கணுத் தாமரை
மலர்ப்பொகுட் டுக்கு ரண்டம்
தெருட்டுஞ் சுவைத்துளி தெளிக்குமுழு மதியினிற்
றிகழ்முத்த மிவைய னைத்துஞ்
சேரக் கடைந்தொப்ப மிட்டுடைத் தொளிமழுங்
கித்தேயு மவைவி ரும்பேம்
அருட்டங்கு நின்பவள விதழ்திறந் திளநகை
யரும்பமணி முத்தமருளே
அரவா சலத்தருமை யொருபாகர் சித்தமகி
ழழகாநின் முத்த மருளே. (6)

வாருந்தி விம்மிக் கதித்தடிப் பாரித்து
வனமுலைச் சைலமகளும்
வளர்செஞ் சடைக்காட்டு மோட்டுப் பெரும்பாந்தள்
வாயிளம் பிறைதுளும்ப
நிருந்து மந்தா கினிப்பெண் ணணங்குமழ
னெற்றிக்க ணிறையு மகிழ்வா
னீள்களி முகத்திடைப் பொங்கியோங் கப்பரிவி
னின்மருங் குற்றிருந்து
தாருந்து நீபங் கிடந்துதகை யீராறு
தடவுப் புயம்ப ழிச்சித்

தனியயிற் கொற்றம் விரித்துரைப் பச்சதம
கன்விபுதர் முனிவ ரயன்மால்
ஆரும் பதம்பரவு மேலே ரகத்துவள
ராறுமுக முத்த மருளே.
யரவா சலத்தருமை யொருபாகர் சித்தமகி
ழமுருகாநின்முத்தமருளே. (7)

தடக்குஞ்ச ரானனத் தனதுதம பன்களி
களும்பநின் றினிது வப்பத்
தமனியம லிப்பசுங் கொன்றைச் சடாடவித்
தாதைபொரு பானனையுறக்
குடக்குங் குமக்கொங்கை வரைமடந் தையுமுளங்
கூரன்பு முகமலர்த்தக்
கோகநக மமர்மாமி யும்பா மடக்கையுங்
குறுமுறுவல் கொண்டி ரந்துன்
றிடக்குன்ற மனையபதோ ளாலவுண ருயிருக்
கிரைக்கடலு மாவும் வரையுஞ்
சோத் துளைக்கநுங் கூர்வே லெடுத்துத்
திறம்பாது நின்று பகையை
யடக்கும் பெருந்திற லிசைக்குவேன் டினருன்ற
னம்பவள முத்தமருளே
யரவா சலத்தருமை யொருபாகர் சித்தமகி
ழமுருகாநின் முத்த மருளே. (8)

கற்பகக் காவும்பொ னுடுமை ராபதிக்
கடிநகரு மயிராணியாங்
காமக் கிழத்தியினை விழைவும்வின் னாரமளிர்
கைகாட்டு பேரேவலும்
பொற்பகத் தயர்கலமு மரியணையு மகபதி
பொருக்கிடக் கொடியவவுணர்
போகமும் பெருவரமு முயிருங் கவர்ந்தவேற்
புனிதகுன் மழைகழைகுழல்
விற்பகப் பொருதகற் குறமகட் கிறைவகடு
விடவா வமிழ்த்தமணியும்

வெண்ணிறத் திப்பிகான் றெளிர்மணியு மிளநிலவு
 வெயிலுமோர் பதம்விரிப்ப
வற்பகற் றெரிவரிய கோதைப் பெரும்பதிக்
 காசேசின் முத்த மருளே
யரவா சலத்தருமை யொருபாகர்சித்தமகி
 ழழகாநின் முத்த மருளே (9)

வண்டரு நறவப் பசுந்துளி யலங்கலின்
 மதுத்துளி முகந்துமலய
மாருதங் கமலத் தனைக்குழலி மூசுமே
 காசவா சந்து வைக்குக்
கொண்டரு வண்டமெய்த் தாமரைக் கண்ணனுங்
 குறுநகை விளைத்து நின்று
குறையிரக் தனனன்றி யடியமும் பிறவிக்
 கொடும்பவப் புணரியேறக்
கண்டரு வருள்பொழி கடைக்கணேக் குதவிக்
 கசிந்தொழுகு மழகனூறற்
கவுரிதிரு மடிகனைப் பத்துளர் பழுத்தனைய
 கனிவாய் திறந்து தழ்விரித்
தண்டர்மா தவர்பரவு மேலே ரகப்பதிக்
 காசேசின் முத்தமருளே
யரவா சலத்தருமை யொருபாகர் சித்தமகி
 ழழகாநின் முத்த மருளே. (10)

முத்தம் முற்றும்

ஆகப்பருவம் 5-க்குச் செய்யுள் 58.

6-வது
வாரானைப்பருவம்.

வேறு.

மழகுன் றனைய பணைப்புயமு
 மணிப்பூண் டயங்குந் திருமார்பும்

வனச மலர்ப்பொற் புறுமுகமும்
  வயக்குங்கருணைப் புன்னகையும்
அழகுங் கடவுட் சிறுபிடியு
  மசலக் குறவர் மடமகளு
மப்போ தப்போ துளக்களிப்புற்
  றகத்திற் புளகமயிர்பொடிப்பப்
பழகுஞ் சிறுபுன் மதித்தாயர்
  பனிநீ ராட்டிப் பழுத்தநறும்
பசிய பொடிமெய் திமிர்ந்துபல
  பணியுந் திருத்தற் கழைத்தனரேல்
மழவின் விளையாட் டியைந் திருத்தல்
  மனமோ வரசே வருகவே
மடவார் நடமா டுங்கோதை
  வள்ளல் வருக வருகவே. (1)

தண்ணங் கதம்பப் பசுந்தொடையல்
  தளிர்க்குஞ் சிறுகுஞ் சிகைமுடிந்து
சாத்த வருக நுதற்சுடிகை
  தரிக்கவருக பணிக்குதம்பைப்
பண்ணுண் டுறுமாப் புறங்குழையிற்
  பரிக்க வருக மதாணியுரம்
பரப்ப வருக மணிக்கடகம்
  பாணிவளைய வருகவிடைக்
கண்ணின் றொளிர்கிண் கிணியரைஞாண்
  கவின வணிய வருகபதங்
கழலுஞ் சிலம்புஞ் சதங்கையுநேர்
  கலிப்ப வணிய வருகவெழில்
வண்ணம் படுகண் ணேறகல
  மைக்காப் பணிய வருகவே
மடவார் நடமா டிடுங்கோதை
  வள்ளல் வருக வருகவே. (2)

முழக்குங் கமஞ்சூன் மழைமுழவ
  முழக்க வெழுஞ்சா தகங்கவுத்த

முன்னின் றியம்பப் பசுங்கதலி
        முடங்காதவிழ்க்க பாசடையிற்
றழங்குஞ் சிறுகாலலைத்தெழினி
        தயக்கப் பொறிவண் டிசைமிழற்றத்
தடந்தா மரையின் மடப்பெடையைத்
        தழீஇய சிறையோ திமமிருந்து
செழுங்கண் பரப்பத் தோகைமயிற்
        சிறைமீ விரித்து நடம்பயிலச்
சிந்தை களித்து முகமலர்ந்து
        திரடாட் கொன்றைக் கனகமெதிர்
வழங்கும் பணைப்பாந் தளஞ்சிகரி
        வாழ்வே வருக வருகவே
மடவார் நடமா டிடுங்கோதை
        வள்ளல் வருக வருகவே. (3)

குடக்குன் றிடித்து நிலங்கிழித்துக்
        குறுங்காற் கவரி நெட்டொருத்தற்
குழவிக் களபம்பிடிகொடாக்
        குலையப் புரட்டிக் கரையுடைத்து
முடக்குங் குடக்காய்ப் பலவொடித்து
        மூரிப் பசுங்காய்த் தாழைவன
முழுது மலைத்துக் கழைப்படப்பை
        முதலைக் களைந்து பைபற்சாலி
திடர்க்கட படுத்துக் கடைசியர்க
        டிடுக்குற் றோடப் பெருக்கெடுத்துச்
செழித்துநடக்கும் பொனித்துறைவ
        திரண்டு கவின்கொண் டொளிர்தரள
வடக்குங் குமப்பூண் முலைக்கவுரி
        மகவே வருக வருகவே.
மடவார் நடமா டிடுங்கோதை
        வள்ளல் வருக வருகவே. (4)

கருதுங் களிற்றி னெதிர்கடந்து
காரவை யடர்த்து வெருவகற்றிக்
கடைக்கட் கருணை கரிக்குதவிக்
கமலத் திறைநீர்க் கறிவரிதாய்ப்
புரியுந் தவத்தி னுறுபயனும்
பொருவில் பெருவீ டினிதளித்துப்
புலம்புந் தெரிவைக் கவைகாப்பட்
புணையைத் துகின்மா றுதவிப்
பெருவஞ் சகத்தா டகையுடலம்
பிளந்து சிலையாய் வழிக்கிடந்த
பேதை யருஞ்சா பமுமகற்றிப்
பெருமா தவன்பின் மிதிலைநகர்
மருவி யிருஞ்சா பமுமிறுத்தோன்
மருகன் வருக வருகவே
மடமான் குமரி தழீஇயபுய
மழவன் வருக வருகவே. (5)

வேறு.

முருகு கமழ்தரு கரிய சுரிகுழன்
முகிழ்மென் முலையிள வனிதையர்
முறுவல் கொடுதிரு விழவின் மறுகிடை
முறைய களிமயி னடமெனப்
பரும மணிதுகில் விரியநிழலிடு
படியின் முறைமுறை கடமிடப்
பதும பதயுக பரிபுர முமெதிர்
பதறி யிடைவறி தெனவலாக்
கருவி னறுமல ரிணைபிணையலணி
தாவளகமி சைதுபல்வாத்
தகைய மடநடை புரிவி னரிவையர்
தமதுநடைசில பயில்வபோற்
குருகு நடைபெய ரரவகிரிமிசை
குலவு கருணையன் வருகவே

குறவர் மடமக ளிதணி னிழலிடு
குமர குருபரன் வருகவே. (6)

தளவ நகையில விதழி னிலகிதழ்
தமர விசைமுரல் பமரமார்
தகர மொழுகிய சுரியல் சுரியமெய்
தளரு முடையொரு கரமிசை
யளவ வொருதலை செருகி யுருபணி
யணிய வமைதியு மிலையென
வகல்பொன் மலையென நிலவு முயர்சிலை
யணுகி நிரைகொடு தெரிவைமார்
களவு கொடுகுற மகளை யிவனெனல்
கவருமொரு கள்வ னெனவெரீஇக்
கனிய ரிரிதர முனிய மதகரி
கடவி மறுகிடை நடவிடுங்
குளவ குகவறு முகவ பணிகிரி
குலவு கருணையன் வருகவே
குறவர் மடமக ளிதணி னிழலிடு
குமர குருபரன் வருகவே. (7)

அரவ மறிகட லகடு கிழிபட
வமரி னெதிரதி ரிகல்செய்மா
வவுண னுடலுயிர் நிவரு நெடுவரை
யகல மொருவழி பகநெறி
விரவ வயிலிரு கரப னிருபுய
விமல வடியவர் தமதுள
வினைத டுருவுமோ ரரல மரகத
விமலை குமரப தமமலர்
மருவு மரசிள வனமு முறுபெடை
யனமு மகிழ்கொடு கலவிட
மகளிர் குமரர்க ளுறநு மிகுதுனி
மயிர்பு ளகமுறு களிவர்க்
குரவ மலர்நறை கமழர வகிரி
குலவு மிளையவன் வருகவே

குறவர் மடமக ளிதணி னிழலிடு
குமார குருபரன் வருகவே. (8)

தவள வினநில வுமிழு முழுமதி
தவழு மிரசத கிரிமிசைத்
தபன னுழுமழ வெயிலி னொளிகெழு
தனுவி னெடுவிடை கடவுமோர்
பவள வரையிடை படரு மொருசிறு
பசிய கொடியென நுணுகிடைப்
பரைவி மலைசிவை கவுரி பயிரவி
பகவதி குமரி யரனுடல்
கவரு முமையொரு புடையி னெழிலுறு
கலச முலைவழி யமுதனி
கருணை பொழிகுறு முறுவல் கொடுகனை
கவினு மதிமுக மலர்வதோர்
குவளை யெனவளர் பனிரு நயனமெய்
குளிர்ப வளிமலைமன் வருகவே.
குறவர் மடமக ளிதணி னிழலிடு
குமார குருபரன் வருகவே. (9)

அமுத கலைமதி தவழ வரைமுக
டரைய வமுதக லசமெலா
மகடு புழைபட வழிவெ ளருவியி
னரமக ளிர்புனல் குடைதொறுங்
கமல மொருபுடை செவலியொருபுடை
கரிய குவளையு மொருபுடை
கவின வலர்மெய்தி கிரிய னையபுள
கமல மறிதிரை மிசையெழ
விமித முடனுட றிமிரு மரிசன
மிசைய கலவை யினறையெலாம்
விரைவி னதியுற சயல்க ளெதிர்கொடு
விமல நதிகலை யுக்டாக்
குமுத சதனறை கமழ ரவகிரி
குலவு மிளயவன் வருகவே

குறவர் மடமக ளிதணி விழவிடு
குமர குருபரன் வருகவே. (10)

வாரானை முற்றும்.

ஆகச் செய்யுள் 98

7-வது

அம்புலிப் பருவம்.

மாகமுக டணவும்வரைச் சாரன்மே யும்வெடி
வாற்றலைக் கன்றுதவு மோர்
வளைகருங் கோடுடைச் செங்கட் கருங்கவரி
மழவிளங் கன்றை யுள்ளி
நாகநிழ லின்றுபடி கப்பாறை யிற்பொழி
நறும்பால் பெருக்கெ டுத்து
நலியும் புலிப்பற ழருந்தமுழை புக்கிழிய
நானிலத் தருவி பெருகிச்
சீசர மெதிர்ந்தெதிர் தரங்கம் பெரும்புனற்
றெருவீதி பரவமுதநின்
றெள்ளமுத கலசங் குறைந்திடினு மிதுகொண்டு
தினநிரப் புற்று நின்ற
ஞாகமது தளராம லொரு தன்மை யாகலா
மம்புலீ யாட வாவே
ஆடிமறை பாடியரு ணீடுசெங் கோடனுட
னம்புலீ யாட வாவே. (1)

சோதிட முன் னூன்முறை யுணர்ந்து கரைகண்டநாத்
தொல்பிறப் பந்த ணாளர்
சொற்படி வழாதுபூ மணநாளி னின்னைத்
தொடர்ந்தெழு பெரும்பாந்த ளால்
வாதனை யுறுதவனை மயிலுண்டு தானவர்
மறுத்துந் தொடர்ந்தி டாமல்

வைநுதிச் செவ்வே லெவன்காத் துண்டுரீ
மாகத்து முன்று சிக்கை
பேதமையுறு மலிவன் மீதுரைத் திடுகின்ற
பிள்ளைத் தமிழ்ப்ப னுவலின்
பெய்முதுக் குறைவுண்டு **கவிராசராசன்**
பெரும்புரா ணச்செய் யுளுண்
டாதாவி னேடுதேர்க் கின்புற்று வாமுலா
மம்புலீ யாட வாவே
யாடிமறை பாடியரு ளிடுசெங் கோடனுட
னம்புலீ யாட வாவே. (2)

வண்டுமொண் டுண்டுபண் கண்டுசிறை விரிதோறு
மடலவிழ்க் காவிக்க நாண்
மலர்விரிக் கிழிபசுந் தேறல்கால் பெருகியவ்
வாவியிற் றேங்க வானே
யுண்டுடல் களித்துவெறி கொண்டுநின் றுகளமீ
தோடிமீ ண்டடர்தாழைவா
யுதிர்கா யுதிர்ப்பக் குடப்பலா வின்கனி
யுதிர்த்துப் பசுங்கதலியின்
கொண்டைபைக் காறாழ்க் கிடைப்பழ முதிர்த்தயல்
குளப்பெருக் காங்கல் புக்குக்
குடைந்துபைம் புட்குல மெழுப்பிவிளை யாடிவளர்
குளிர்புனற் செறிசோலை வாழ்
அண்டர்மண் டெண்டிசையர் மண்டலந் தொழுமிவனொ
டம்புலீ யாட வாவே.
அடிமறை பாடியரு ளிடுசெங் கோடனுட
னம்புலீ யாட வாவே. (3)

முருகோடு பொற்றா துகுங்குரக் காட்புன்னை
முத்தம் பரப்பி யும்பர்
முகசுந் துணர்ப்பக்க ரிற்பாட் டளிக்குல
முழக்க மறை முழவமார்ப்பக்
குருகோ டுடன்றெழு மகன்றில்கா ளங்கொளக்
கோட்டிளைய கோட்டு மேதி

குளிர்நிழல் வதிந்துகன் களிகொண்டு நோக்கக்
குழக்கன்று துள்ளி யாட
வெருகோ டிளங்கருப் பைப்பறழ் பனிப்புரு
விளையாட வேங்கை யுறையுள்
வெருவுஞ்சிறு புல்வாய் துயில்பகை கடிந்தபணி
வெற்பிறைவ நின்னையன்பின்
அருகோ டிருந்துவிளை யாடற்கு வேண்டியனு
னம்புலீ யாட வாவே
ஆடிமறை பாடியரு ணீடுசெங் கோடனுட
னம்புலீ யாட வாவே. (4)

ஓகைகொண் டிமையவர் தடைவைநீ யிவனிரவை
யோடத் துரந்து காப்ப
னுலகெங்கு மவிரொளி விளைப்பைநீ நின்மனத்
தோங்கொளி விளைப்ப னிவனே
சாகையுறு நானன் கலைக்குரியை நீயிவன்
சகலகலை யுந்தெ ரிந்தோன்
றாளான் மழுங்குண்ட தொருமுக முனக்கது
தளிர்க்கவள ராறு முகவன்
மாகமுய ரமரருக் குபகாரி நீபுவன
மன்னுயிர்க் குபகாரிகாண்
வாளெயிற்ற ரவினுக் கஞ்சுறுவை நீயந்த
மாசுண வரைக்கி றையவ
னாகையா லிவனரு கிருந்துதனி வாழலா
மம்புலீ யாட வாவே
யாடிமறை பாடியரு ணீடுசெங் கோடனுட
னம்புலீ யாட வாவே. (5)

வேறு

முருகளைந்திடு சுரிகுழன்மங்கையர்
முகமிணை யுறநாணி
முயலுறுஞ்சிறு மறுவதடைந்தனை
முதுபெரும் பணப்பாந்த

ளரிய கின்றனெ யெளிதிகடுந் தண்ணவு
மஞ்சிமெய் குறைகின்ற
யதுவு மன்றிநின் முகமழுக் குண்டது
மவனியா றறியாதே
பெருமி தக்கரு பொருளுனை ரிவனே
பிள்ளைமை கருகாது
பிரிய முற்றசேக யமைபுமென் றுள்ளினிற்
பிரிகலாதெந்நாளு
மருவி ருக்குநின் குறைமுழு தக்கரு
மம்புலி வருவாயே
யயில வன்பணிச் சயிலகின் றழைத்தன
னம்புலி வருவாயே (6)

விண்ட ராதல மடங்கலு மிவன்பதி
வெற்பெலா மணிமாட
மேரு மால்வரை மேனிலக் கிகிரிமா
விண்டுசுற் றிடுகாஞ்சிற்
பண்டை நான்மறைப் பொருளெலா மிவன்புகழ்
பண்ணவர் முதலேனோர்
பழக்கொ ழும்பினர் வானநாட் டிமையவர்
பரிசனப் பரியாளர்
துண்ட நாண்மதி சூடிமா லயனிவன்
சொற்படி யமைச்சேகான்
சோதி வானவ னிவனலான் மற்றது
சொற்றிடற் கமையாதால்
அண்டர் நாயக னுடனிருந் தாடுதற்
கம்புலீ வருவாயே
அயில வன்பணிச் சயிலனின் றழைத்தன
னம்புலீ வருவாயே. (7)

கருணை யுங்கள வுங்கொலை யும்பொயுங்
கட்கடைக் குடிகொண்ட
கவரி தழ்த்துவர் வாய்ச்சிறு புன்னகைக்
[redacted]கலச மென் முலைமாதர்

கருணை றங்குறற் றோதிய நானடிகேட்
        துணைமலர்ப் பதந்தோய
துவனு கப்பிடை நடங்கநா புரந்தொடு
        சோருமே கலீயேயங்கக்
தெருக டக்துரீர்த் துறைப்படி குக்குமச்
        சேதக மலைநாறுந்
செழுக்க டங்கரைப் பொய்கைசூழ் சோலையந்
        திருப்பெரும் பதியாளன்
அருணை யக்துனைக் கடைக்கணுற் றனளினி
        தம்புலீ வருவாயே
அயில வன்பணிச் சயிலனின் றழைத்தன
        னம்புலீ வருவாயே. (8)

வண்ட றூமல கரிமிழற் றம்புய
        மலாவிழ்க் தெழில்கூரும்
வாவி புஞ்செழுஞ் சாலியின் பழனமும்
        வளர்கருப் பங்காடுங்
கொண்ட றூவுபைஞ் சந்தனச் சோலையுங்
        குரம்பொ துக்கிய கால்வாய்க்
கூல முங்குள னுங்கமஞ் சூற்குடக்
        கூன்வளை தவழ்ந்தேறி
மண்டு சூன்முதிர்ந் தின்றநீண் மணிநிலா
        வழங்கவெம் பணிகான்ற
மணிக்கு ழாமிள வெயில்விட வளர்கோடி
        மாடச்செங் குன்றூர்வாழ்
அண்டர் நாயக னுடனிருந் தாடுதற்
        கம்புலீ வருவாயே
யயில வன்பணிச் சயிலனின் றழைத்தன
        னம்புலீ வருவாயே. (9)

கார்வி டுத்திகல் புரிவயி ரப்படைக்
        காவலன் முனிவோர்கள்
கடவு ளோர்முத லறனியன் றோர்வதி
        கடிநகர் சிறைமூடப்

போர்வி டுத்தெழு புவனமு மாசுமுற்
        புரிதயித் தியனுளி
பொருத டக்கைவேல் கொண்டுகொன் டவனிவன்
        புனிதவேள் புவிமீதில்
ணார்வி டப்பணி மலைக்குத விங்ஙன
        முற்றுனை வாவென்று
னுற்றி டாவெனி லப்பணி வந்துநின்
        னுடன்முழு துண்டாளு
மார்வி லக்குதற் குரியமோன் றுணர்விலை
        யம்புலி வருவாயே.
யாமில வன்பணிச் சயிலனின் றழைத்தன
        னம்புலி வருவாயே. (10)

அம்புலி முற்றும்

ஆகச் செய்யுள் 78

8-வது

சிற்றிற்பருவம்.

வேறு

சுழிக்குந் தரங்கத் திரிபதகைத்
        தொன்னீர்ப் பெருக்கிற் பாந்தரிக்குஞ்
சுடர்கால் மணிப்பைச் குட்டகிக்குத்
        துணுக்குற் றிளவெண் பிறையொதுங்க
விழிக்குங் குளத்திக் கொழுந்தெனமேல்
        விரிக்கும் படர்செஞ் சடைப்பெருமான்
மெய்யோர் பகுதி காந்துறையும்
        விமலை மலர்க்கட் டுணைகளிப்ப
வழிக்கொண் டரைக்கிண் கிணியரற்றி
        மணிவாய் முறுவற் சிறிதரும்ப
மகிழ்வி னடந்திங் குடனுறைந்து
        மணற்சோ றயிறல் கடனன்றாற்

செழிக்குந் தமிழ்க்கோ தைப்பதிவாழ்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ்
சேர்ப்பா சிற்றில் சிதையேலே. (1)

தறுகட் சிறுகட் புகர்முகத்துத்
தடவெண் மருப்புப் பனைக்கைநெடுஞ்
சயிலங் களைக்கு மதக்கலுழித்
தாரை பெருக்குற் றிழியருவி
மறுகிற் குறுகிப் பெருநியமம்
வழுக்குற் றிளைஞ ரிழுக்குறநாண்
மலர்ப்பூங் குழலார் சிலைக்காமன்
வசந்தத் திருப்பேர் விழவினெடுத்
திறுகுற் றிறைக்கும் பசுங்களபத்
தெழில்கூர் நறுந்தண் சுணைப்பொடியா
லிருஞ்சே றகமுற் றரசர்திண்டே
ரெதிரோட் டுறுபைந் துகட்சிறுகால்
செறுகுற் றுளிர்சூ ழிகைக்கோதைத்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ்
சேர்ப்பா சிற்றில் சிதையேலே. (2)

தூக்கின் றொகுதி யரங்குதொறுஞ்
சொல்லு மிசையுஞ் சுதியுமிடை
தொகுத்தும் வகுத்தும் விரித்துமலர்த்
தோட்டுக் கமல வீட்டு வதி
தாக்கும் வியக்கும் வனமுலையார்
தத்தங் குழுமி முத்தமிழுந்
தாவா விருந்து பாராட்டத்
தழைக்கும் புகட்கங் குரியாக
வாக்கு மகனட் டிலிற்பதத்தி
னடுத்து வடித்த மெய்யவாகு
வருவிப் பெருக்கி னுவட்டியெடுத்
கமலை விளைத்துக் கமலமுடன்

றேக்கும் பழனத் திகழ்கோதைத்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ்
சேர்ப்பா சிற்றில் சிதையேலே. (3)

கழிக்கண் டலில்வண் டலின்மறுகிற்
கரையிற் றுறையிற் குறையினடுங்
கழையிற் றழையுஞ் சோலினடலிற்
கமரிற் குமரிச் செறுக்குற்றிற்
கழிக்கும் புனறுற் றிடங்குழியிற்
கழியிற் கமலக் கமலநெடுஞ்
சுனையிற் கமஞ்சூல் வயிறளைந்து
சுரிக்குங் குடக்கூன் முடப்பணிலங்
கொழிக்குத் தரளம் பழுத்தபைந்தாட்
கொழுஞ்சா லியின்செங் குரலியுங்
கொற்றுக் களப்ப வதுவடித்துக்
குடிக்கு நறவுக் கெகிளக்கு
செழிக்குத் தமிழ்க்கோ தைப்பதிவாழ்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ்
சேர்ப்பா சிற்றில் சிதையேலே. (4)

அறுகா லளிபாண் மிழற்றமுகை
யவிழ்ந்து பசுந்தா துகுத்தெரிய
லசைந்து பசைந்த கருங்கூந்த
லமுத மனையார் முலைபெரிது
மறுகால் வருத்தத் திடையிடையோர்
மாற்றங் கிடையா தெனவணியு
மணிமேகலையு நூபுரமும்
வாய்விட் டிரங்க நடைபெயர
வுறுகா முகர்கண் டுளமயங்கி
பொருபா னெருங்கித் தொடர்ந்துசெல
வுவரி முரசங் கலிப்பமத
னுறுத்துச் சமர்க்கென் றெழுந்தார்க்க

சிறுகால் வழங்குந் தமிழ்க்கோதைத்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ்
சேர்ப்பா சிற்றில் சிதையேலே. (5)

வேறு

தன தன தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதான

அருமறை பகுத்த முதுமகனுரைத்த
வரியசொலி னுற்ற பொருள்யாதே
அறைகென மயக்க மொடுதலை குனிப்ப
வதுகொடு சிறைக்க ணிடுகாலின்
விரிபுவி படைத்த லொழியவதின் முதனொ
ழிலுமற வனைத்து முளமாழ்கு
விடைகட வொருத்த னுடன்முறை யிடத்தன்
விரகினொடு முற்றி வரலாறே
துறையென நவிற்ற வவன்வர னுணர்த்த
வுளமகிழ்கொ டப்பொரு ளையோதென்
றுழையணி கரத்து மழவிடை யுயர்த்த
வொருமுதல் வணகக மொடுதாழக்
குருவடிவ முற்று மலைவனிதை பெற்ற
குமரனெமர் சிற்றில் சிதையேலே
குறுமுனி துதிக்க முதுதமிழ் விதிக்க
குழகனெமர் சிற்றில் சிதையேலே. (6)

அலர்திரை புரட்டு மறிகடலுடுத்த
வகிலர்கத னத்த ருரகேச
ரவனிவ னெனற்கொ ரிடனறநெருக்கி
யடியிணை பழிச்சி முடிதாழ
வலைபொரு தறுத்து வளர்குழை கிழித்து
மலைகுமி ழுடைத்து மறுகூடே
வருமிளைஞரைக்க லுவியெதிர் சினத்து
மதர்கொடு சிவத்து முறைமாறிக்

---

6. விரித்த—பி-ம்.

கலகமிடு மைக்க ணரிவையர்க ளித்த
    கலபமயி லொப்ப நடமாடக்
கதிர்மணி கொழிக்கு நதிபெயிர்செ லுற்ற
    கயல்களுக ளித்து முகில்பிறங்
குலமலை வழுத்து மாவமலை யுற்ற
    குமரனெமர் சிற்றில் சிதையேலே
○ குறுமுனி துதிக்க முதுதமிழ் விதித்த
    குழகனெமர் சிற்றில் சிதையேலே. (7)

பொருதிரை இரட்டு கழைமணி மதுத்த
    புகர்முக மருப்பி னுகுமாரம்
பொதியரவு கக்கு கதிர்மணி பரப்ப
    புதுவயிர மொப்பின் மணிநில
முருவம ணரித்த பொனினறல் கொழிக்கு
    மொளிகெழுபொன் னித்துறையி னூடே
யுருவசியை யொத்த வரிவையர்கு ளித்த
    வுயர்கலவை மிக்க மணநாற
வருகிரு கரைக்கண் மகிள்சுர புனைத்தொ
    குதிமரு தணித்தண் மலர்மீதே
யறுபத மிரைத்து மலகரி தெரிப்ப
    வடரிரு டரப்ப வகல்சோதிக்
குருமணி விளக்க முறுபணிகிரிக்கு
    மரனெமது சிற்றில் சிதையேலே
குறுமுனி துதிக்க முதுதமிழ் விதித்த
    குழகனெமர் சிற்றில் சிதையேலே. (8)

வேறு

தன தன தனத்த தனதன தனத்த தனதான

அரிவதன முற்ற வவுணனவ னுக்கி ளையசூர
    னடருளை முகத்த பல்கிரள்புபத்த சுரனோடு
முரியகிளை முற்று மொருநொடியி லுற்றொ ருழைமாள
    வொளிவுறுதயித்தி யனுமுவரிவெற்பு முதுமாவு

---

8. மலகரி — விடியற்காலப்பண்.

மரிதர விடுக்கு மொளிரிலையசக்திகரநின்
னடியிணைவழுத்து மவர்பவமகற்றல் நெறியாமே.
பரிவினொடியற்றி வதியுமெமர்சிற்றில் சிதையேலே
பணிகிரி விளக்கு முருகனெமர்சிற்றில் சிதையேலே. (9)

மதுமல ருகுக்கும் வகுளநிழலிற்றண் மணல்கோலி
லமைமணியி னட்டி லிடுகுழிசி யிற்பெய் புலைநீர்கற்
புதுகறவிலிற்ற ளவல்சிபுகட்டி யடுசோறு
புதுவரவினுற்ற னொதுமலொடிருக்தி யயிலாமே
கதுமெனவழிப்ப வுணரசியற்று பதியோமுன்
கடவுளரசுற்ற கடிமணையெனக்க ருதியோநின்
பதமலர்சிவப்பு மிழவெமதுசிற்றில் சிதையேலே
பணிகிரிவிளக்கு குகனெமதுசிற்றில் சிதையேலே. (10)

சிற்றில் முற்றும்

ஆகச்செய்யுள் 88

9-வது

சிறுபறைப் பருவம்.

வேறு

ஆரண மணைத்துநின் றுனதிசை முழக்கமல
ரம்புயன் றுதிமுழக்க
வண்டரா கண்டல னெதிர்க்கடி பணிந்துபே
ராவல முழக்க நேமி
நாரணன் பாற்கடன் மதித்தவமு தொடும்வந்த
நளினமி னுடன் பிறந்த
நனிதீர் வலம்புரி முழக்கவி ணரம்பையர்
நடித்துநின் றிசைமுழக்க

குறிப்பு:— பழனிப்பிள்ளைத் தமிழில் சிறுபறையை யடுத்துச் சிற்றில் வருகின்றது. செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழில் சிற்றிலையடுத்துச் சிறுபறைவந்துள்ளது.

வாரண முகத்துனது தமையன் களிப்போடு
        மதத்தொனி முழக்கநாளு
மண்மடந்தையர்பாட லீடொலி முழக்கவளர்
        மறுகெங்க ணும்வளங்கூர்
சீரணவு செந்தமிழ்க் கோதைப் பதிக்கிறைவ
        சிறுபறை முழக்கியருளே
இரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு
        சிறுபறை முழக்கியருளே. (1)

வாரிச மடந்தைமண முண்டமணி மார்பத்து
        மாதவக் கடவுணொருனல்
மல்லற் புயத்தவுணன் மேதினி சுருட்டி.
§ மாபா தலம்புக்க நாள்
பாரிய வராகவ தாரமாய் மண்கீன்று
        பருமருப் பினிலெடுத்த
பார்மக ளுடுத்தபாய் திரைநெடுங் கார்க்கடல்
        படிந்துவர் கடிந்துபோக்கி
வாரமு தயின்றருன் முகிரமெய் கறுத்தேறி
        வானெழுந் தகடுவீங்கி
வலவருந் துற்றந் தாக்குலைந் தகல்பாழி
        வாய்திறந் தண்டமண்டி.
சோரவெழு கார்முழக் கிடுபணி கிரிக்கிறைவ
        சிறுபறை முழக்கி யருளே
இரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு
        சிறுபறை முழக்கியருளே. (2)

போதுற்ற கற்பகச் செழுநறுந் தொடரும்
        புவிப்புது மலர்த்தாமமும்
பொலிவுற வுதிர்ந்தவிதழ் பொன்வினைஞர் கைபுனைப்
        புனையிழை மணிக்குழாமுங்
காதற்படித்திரு மடந்தைய ரணிந்தசிறு
        கலனும்ப வீர்குழைத்த

---

§ 2. புக்கனான், பி — ம்.

கலவைப் பசுஞ்சே தகப்பொதிகை புனைகலாக்
கடவுட் கொழுஞ் சுன்னமும்
மாதர்ப் பிடிக்குலமு மாமக ளிருஞ்சமர்
மலைந்தவுண் செற்ற செவ்வேல்
வாழிபா டித்தமின் முழக்கிடுங் குரவையின்
மருங்கெங்க ணுந்துவைபடச்
சீதப் புனற்றிரை முழக்குசெங்கோட்டிறைவ
சிறுபறை முழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு
சிறுபறை முழக்கியருளே. (3)

கன்னற் கழித்துங் கரும்பாலை யிட்டுங்
கனிந்தசா றட்டு வட்டுக்
கண்டும் பழுக்காய் கறித்துரித் தும்பசுங்
கதலியங் குலைத டிந்தும்
துன்னுற்ற முட்குடப் பலவின் பழங்கிழித்
துஞ்சுளை யளைந்தெ டுத்துந்
துணைக்கவைக் காற்கரும் பகடலம் பூட்டியேர்த்
தொழுதுழுது மஞ்ச டொட்டும்
பன்னற் கிழங்கிஞ்சி நீரிறைத் துஞ்செழும்
பழனத்து நடவு நட்டும்
பல்வினைக் கைவினை முடித்துடன் முழக்கிடப்
பருமுத்த மெதிர ளந்து
செங்நெற் கதிர்ப்போ ரிடுங்கோதை வளர்குமர
சிறுபறை முழக்கி யருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு
சிறுபறை முழக்கி யருளே. (4)

எழுதாத முதுநூலு மாகமப் பகுதியுட
னிதிகாச மங்க மாறு
மினியமுத் தமிழின் பெருங்காப்பி யத்தொடர்
பிலக்கணப் பகுதிகீதத்
தொழிலே ழிசைத்திறந் துத்தமொடு தாரந்
துலங்குகைக் கிளைமந்தரந்

தொடர்மந்தி மந்தார கத்துயர் விகற்பமுஞ்
    சுதிகொளு டகவ குப்பிற்
கொழுவாறு நிலையுகற் றொழிலாறு காமுங்
    குறிக்குழு வகையங்கமுங்
கூறுமக மார்க்கமும் புறமார்க்க விதமுங்
    குறிக்கொண் டுணர்ந்தனுதினஞ்
செழுமாட மாளிகை முழக்குகோ தைக்கிறைவ
    சிறுபறை முழக்கி யருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவிநெடு
    சிறுபறை முழக்கியருளே. (5)

வேறு

தகரப் புரிகுழன் மங்கையர் கொங்கை
    தனக்கிணை யொவ்வாமற்
சலிலத் திடைமுது பங்க மடைந்து
    தடம்புனன் மேனீ
ரகடு கிழிய வளர்க்தெழு ஞாள
    மரும்பி யடிப்பாரித்
தம்புய முகையுளம் வெம்பி யுயிர்ப்ப
    வலர்ந்த மலர்ப் போகிற்
பகர்தற் கரியசு வைத்தெளி யுண்டு
    பசந்து களிப்பேறிப்
பரியவ ராலுக ளும்பொய்கை மேவு
    பழம்பதி யேகம்வாழ்
குககட் செவிமலை யுமைபெற் றமதலை
    கொட்டுக சிறுபறையே
குக்குட துவசம யிற்பரி யுகைபவ
    கொட்டுக சிறுபறையே. (6)

கங்கு திரண்டுரு வங்கொ டெழுந்த
    கடுத்தகல் வானேறிக்
கால்கொடு கார்மழை பெய்த கடும்புனல்
    காடு பறம்பு சோளா

தெங்கு நிரம்பி யெடுத்த பெருக்கி
னிருங்குட கிற்றலை சாய்த்
திருநிலை முந்திய பொன்னி நடந்து
வெழிற்பூர் துறைநாடா
திங்கள் வகிர்ந்து கவுட்கண் மடுத்த
மருப்பிவர் வெண்கரியின்
தெய்வப் பிடியுத வுஞ்சிறு மங்கை
திரண்ட முலைக்களபக்
குங்கும பங்க மளைந்த தடம்புய
கொட்டுக சிறுபறையே
குக்குட துவச மயிற்பரி யுகைபவ
கொட்டுக சிறுபறையே. (7)

மன்ற லளைந்து தடம்பணை நீரொடு
வாவியி னீரளவி
மாழை வருக்கையி லாங்கவி பூக
வனத்தி னிழற்றடவிப்
புன்றலை வந்து விரிந்த கொழுந்தளி
ரும்பூ வும்வருடிப்
பூசன் மதன்சமர் வேளை யுணர்ந்து
புதுத்தோ டெதிர்சிந்தித்
தென்ற லிளஞ்சிறு கான்மறு கூடு
செழும்பி வருங்கோதைத்
திருநக ராள வருந்தவர் சிந்தை
தெரிந்துறை பேராள
குன்ற மெறிந்து தடிந்தசெவ் வேலவ
கொட்டுக சிறுபறையே.
குக்குட துவச மயிற்பரி யுகைபவ
கொட்டுக சிறுபறையே. (8)

கண்ட னறுந்தளி ருச்சிவெ டித்தசு
கந்த நெடும்போதிற்

கடிகொள் பாரகமும் வளைசர புன்னைக்
 கமழ்தா துங்கெழுமி
முண்டக நாண்மல ருகுதண் டேறலின்
 மொய்த்தக லெனவிடி
முன்புற வண்டு சுரும்ப ரொழுக்கு
 முழங்கிய பாடொலியிற்
றெண்டிரை யுந்திய வோதைமு ழாவொலி
 செய்ய மயிற்பெடைகுழ்
சேவ லிளங்கோ கைக்குல மாடச்
 சினைமுதிர் சரியமிறக்
கொண்ட லுறங்கிய தண்டலை யோசக
 கொட்டுக சிறுபறையே
குக்குட துவச மயிற்பரி யுகைபவ
 கொட்டுக சிறுபறையே. (9)

மாக மளக்கு வளர்ந்தெழு பொக்கை
 மகன்றி லிருக்குத
மாவழ யிளஞ்சினை யூடு கருங்குயின்
 மன்னிசை பின்கூவப்
பாகமை மென்சென் மடந்தையர் பொய்தல்
 படர்ந்து தொடர்ந்துவரப்
பாவை முழங்க மதன்சமர் மேல்கொடு
 பைய வருஞ்சிறுகா
லோகையொ டுர்த்தக லாவண மன்றி
 லுலாவரல் கண்டு மகிழ்த்
தோகை தடம்பொய்கை வாவியு மகமுக
 முற்று மலர்ந்ததெனக்
கோகன கம்பொலி கோதையர் நாயக
 கொட்டுக சிறுபறையே
குக்குட துவசம யிற்பரி யுகைபவ
 கொட்டுக சிறுபறையே. (10)

சிறுபறை முற்றும்.

ஆகச்செய்யுள் 98.

10-வது

சிறுதேர்ப் பருவம்.

வண்டோ விடுந்தண் டலைப்புது மலர்த்தொகுதி
மதுநீர் தெளிப்ப வாடை
வந்துகாட் டுக்களைய மணிவாயி ரோரணமு
மல்குகே தனமுநாட்டிப்
பண்டே ரளிக்குல முழக்குபூ கக்கொழும்
பாளையு மலர்த்தாமமும்
பாங்கினொடு துணையுறத் தூங்கநாற் றிச்செம்
பழுக்காய்க் குடும்புதூக்கித்
தண்டே ரரம்பைப் பழக்குலை நிரீஇப்பசுந்
தமனியத் தகடமூத்தித்
தழைபசும் பட்டினிற் றாக்கமுங் கொடியுந்
தனித்தனி பகுத்து நிறுவித்
திண்டேர் நடாத்துதிரு விழவருக் கோதையாய்
சிறுதே ருருட்டி யருளே
தேவரப யங்காத்த தெய்வப் பசுங்குழவி
சிறுதே ருருட்டி யருளே. (1)

மாதர்மதர் நோக்கிற் குடைந்தமான் கன்றுமெழில்
வாணுதற் கண்டுவெஃகு
மதியிளங் குழவியும் புன்மூர லுக்கஞ்சி
மறையுங்கு ழலையு முள்ளம்
பேதமை யுருவகை யளித்தபய நல்குமெம்
பெருமா னிடம்பகுத்த
பெருமலைக் கரையனருள் பனிமலை விளங்கும்
பிராட்டியக் கையினெடுத்துச்
சூதடர்ங் கொழுமுலைப் பானிலத் திட்டுவெண்
சுரிமுகச் சங்கினூட்டித்
தொகுசங்கு முச்சியிற் பண்டியிற் சேர்த்துடம்
சுற்றிக் கவிழ்த்துமேனி

சீதள நறுஞ்சுண்ண நீராட்ட வளர்குமா
சிறுதே ருருட்டியருளே.
தேவாப யங்காத்த தெய்வப் பசுங்குழவி
சிறுதே ருருட்டியருளே. (2)

மட்டவிழ்த் தலிதழி யக்கொங்க ராங்குசெவ்
வானதல் கொழித்த தேப்ப
வளர்செஞ் சடாமுடி பொருத்தன் றிருத்தகு
மடக்கனார் பயிரவியுடன்
வட்டமொத் திடகட்ட மிடுஞான்று குலகிரியு
மறிகடலு மண்ணும் விண்ணும்
மாதிரமு மண்டரா கண்டலனு நிலைதட்டு
மாறிச் சுழன்றுடமேற்
கட்டுசெஞ் சடையினிற் றிங்களா டப்புனற்
கங்கையா டப்படப்பைக்
கட்செவி திளைத்தாட நின்றாடு காட்சியிற்
காணகா டண்டபாதத்
திட்டமிட் டாடும் பிரான்றந்த முருகேச
சிறுதே ருருட்டியருளே
தேவாப யங்காத்த தெய்வப் பசுங்குழவி
சிறுதே ருருட்டியருளே. (3)

மருமணங் கெழுமுபூந் தொடர்துயல் வருங்குழன்
மடந்தையர் கடைந்தவடிவாள்
மைக்கணுக் கிக்கெனுஞ் சக்கர மதிக்கவிகை
மதவேள் மனங்கறுத்துப்
பொருநெடுஞ் சிலையினா ணேற்றிக் குணத்தொனி
புதுக்கிக் கரத்தடுக்கிப்
புங்கம் பதித்துத் தொடுத்துவிடு பகழியும்
பூசல்கொண் டெதிர்மலைந்தும்
பெருநெறி விலக்காது மறுநெறி விளக்கிப்
பிறங்குபூந் துறைசைநாட ll.

---

ll. 4 நாட்டில் — பி,ம்.

போாக மத்தொடு தமிழ்ப்பெருங் காப்பியப்
பெற்றியுங் கற்றுணர்ந்து
திருவிளங் கியசியம மருவுதென் கோதையாய்
சிறுதே ருருட்டியருளே
தேவராப யுங்காத்த தெய்வப் பசுங்குழவி
சிறுதே ருருட்டியருளே. (4)

செய்க்கட் பசுந்தாட் சரோருக மலர்ந்துபொழி
தேன்செழுஞ் சாலிவயலிற்
றேக்கிப் பரந்திடத் தாழைக் குடும்பிளஞ்
செம்முகப் பசுநிறத்த
முக்கட் குரும்பையை யுடைத்திளஞ் சூற்பிணவை
முதுமந்தி நீருகுதி
மூரிக்க ரும்பகட் டுழுசா லெறிந்திட
முடங்கலம் விட்டுழுனர்போ
யிக்குப் படப்பையுட் புக்கொளிப் பப்பண்ணை
யிளநாறு நடுகடை சிமார்
இழிவா நகைத்தூக்கை கொட்டிபா டவர்திற
மிழுக்கியார்த் திடுநலோதை
திக்கெட்டி னும்பரவு கோதையம் பதிமுருக
சிறுதே ருருட்டி யருளே
தேவராப யங்காத்த தெய்வப் பசுங்குழவி
சிறுதே ருருட்டி யருளே. (5)

பாட்டளி மொய்த்தெழு தண்டலை யூடலர்
பைம்போ தெதிர்கொய்யும்
பாவை மறைந்தய னிழல் வதிந்துறை
பண்புடை நாதனையோர்
சேடி மறைத்தரு குறவிரு குவளை
செழுந்தா மரைமூசுஞ்
செய்கையி னேடிரு கண்புதை கொள்ளச்
சிந்தை யுறுங் காவா

லாடக மணியொளிர் கடகச் செங்கையி
    தாரென லும்புலரா
ஆயிழை சிறடி விழ்க்கடி யன்பிழை
    யாயிர மும்பொறெனை
ஆடல் திருத்திடு கோதைக் கிறைவ
    வருட்டுக சிறுதேரே.
யுமையொரு பாகரு வத்தருள் பால
    அருட்டுக சிறுதேரே. (6)

கோங்கி னரும்பன முலைமட மங்கையர்
    கொலைவேல் விழிதாவுங்
குழையணி தண்டா ளத்துவல் வருமொளி
    குளிர்வெண் ணிலவீன
விங்கு முலைக்கணி களபஞ் செக்கர்
    விரிப்ப மதாணிமணி
வெயிலுமி முத்தமின் மனமகிழ் கொண்டு
    விழாவணி பாராட்டி.
வாங்கு மருங்கு துவண்டிட முன்றிலின்
    வள்ளை வளம்பாடி
மன்ற லியற்றிய பொங்கொலி யார்கலி
    மன்னு முழக்கமென
வேங்கி வளங்கெழு கோதைக் கதிப
    அருட்டுக சிறுதேரே
யுமையொரு பாகருவந்தருள் பால
    அருட்டுக சிறுதேரே. (7)

பாசடை முள்ளரை மெய்கா ளச்செம்
    பங்கய மலரமளிப்
பார்ப்பினை வெஞ்சிறை மூடு துயிலியற்றிய
    பானிற மடவன்னம்
ஏச முறுஞ்சே வலினரு காச
    கிலைஇய பெரும்பான்மை

நீனில வேந்த ருடன்பெண் ணரசு
நிகழ்த்திள வரசினொடுந்
தூசி முடங்குளை யரியணை பொலியுந்
தோற்ற மெனக்ககனத்
தூய மலர்க்கற் பகமிசைவல்லி
துடங்கி நுடங்கியபச்
சூசலின் மயிலுகை கோதைக் கதிப
னுருட்டுக சிறுதேரே
உமையொரு பாக ருவந்தருள் பால
னுருட்டுக சிறுதேரே. (8)

கற்றை நிலாவுமி ழுஞ்செழு மாமதி
கார்வரை யின்குடுமிக்
கண்டவ முக்கலை தேய்ந்தொழு கமுதங்
கால்கொடு பேரருவி
முற்றி வளம்பதி யாவண மண்டி
முழுச்சா யுப்பெருக
முருகு கமழ்ந்தெழு பொங்கரி னுண்மலர்
முகைவின் டிழிதேறற்
கொற்ற மனேசன் வசந்த விழாவிற்
குங்கும பங்கமொடுங்
கொடிநுண் ணிடைமட வார்கட கக்கை
கொழிக்குஞ் சிவிறியினீ
ருற்று மணங்கெழு கோதைக் கதிப
னுருட்டுக சிறுதேரே
யுமையொரு பாக ருவந்தருள் பால
னுருட்டுக சிறுதேரே. (9)

அலர்கதிர் ஞாயிறு சினகர நீண்முடி
யணவு தொறுஞ்சுடர்கா
லம்பொன் மணிக்குட விம்ப மடுக்கிய
வகல்பா தலவளவா
யிளகி விளக்க மணிச்சுடி கைப்பணி
யின்பிர பைச்செமணி

யெதிரொளி சிந்த வளர்ந்தெழு கோபுர
        மெழுகுர வோர்வதியும்
பலநிரை மாளிகை சூளிகை தானிகர்
        பலகலை தேர்மாடம்
பரிகல மங்கையர் தெரிய னரங்கு
        பசும்பொனின் மேனிலமு
முலக முவந்தொளிர் கோனைக் கதிப
        னுருட்டுக சிறுதேரே.
யுமையொரு பாக னுவந்தருள் பால
        னுருட்டுக சிறுதேரே. (10)

சிறுதேர் முற்றும்.

செய்யுள் 108

செங்கோட்டுவேலவர் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

செங்கோட்டுவேலவர்பிள்ளைத் தமிழ்.

குறிப்புரை.

பாயிரம் 1. நீர், மங்கலச்சொல் — கங்கையாறு, பிறைநிலவு — பிறைச்சந்திரன். உகுகுறுந்திவலை — வீழ்கின்ற சிறிய திவலையாகிய, நித்திலம் — முத்து. என — போல. ஒழுகுஅமுதசிகரம் — ஒழுகுகின்ற அமுதமாகியமழையை. சிகரம் என்பதற்குத் திவலை (யானது) ஒழுகு அமுதசிகரம் எனக் கூட்டிச் சந்திரனிடத்துள்ள அமுத கலசத்தை எனப் பொருள் கொள்ளுதலுமாகும். நெடும்பாந்தள் நுகர — நீண்டபாம்பு அருந்துதற்கு. இதழித்தார் — கொன்றைமாலை, தோள்மிசையில் — சிவபிரான் தோளின்மேல். ஏறிநின்றது — ஏறிநின்றதை. கண்டு — தான் பார்த்து. தறுகண்உற்று — அஞ்சாமையுடன்வந்து.இடர்தர — துன்புறுத்தவும், வெரீஇ — பயந்து, தரங்கம் — அலை. வான்நதி —கங்கையில், புக்கு ஒளிப்ப — போய்ப்பதுங்க. (அதனைக்கண்டு) அவிர்மூரல்புரி — விளங்குகின்றபுன்சிரிப்பைச் செய்கின்ற. தந்தாவளம் — யானை முகக் கடவுள்.

சூர்கொண்ட — சூரன் உயிரைக் கவர்ந்த வேலென — வேலென்று — நாகவல்லியின்தொல்இலை — கொடிக் காம்புடன்கூடிய பழுத்தவெற்றிலையை. சோரன் — திருடன். போழ்ந்து — பிளந்து. மெய்பனிப்புறும் — உடல் நடுங்கிய. தோகை — பெண். கடுப்ப — ஒப்பாக. கொழிக்கும் —பொழியும். பணிகிரிக்குஇறை — நாககிரிக்குத்தலைவன். கவிகள் — பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள். "கவி" எனும் பாடத்திற்குப் பிள்ளைக்கவி என்று பொருள்கொள்க. கவிகளுடொறும் தழையத் துதிப்பாம் எனக் கூட்டுக.

பாம்பு சந்திரனது அமுதத்துளிகளை நுகர்வதற்குச் சிவபிரான் தோள் மேலேற அதுகண்ட விநாயகர், பாம்பு சந்திரனைப் பற்றப்போவதாக எண்ணித் துன்புறுத்த அப்பாம்பு கங்கையில் போய் ஒளித்ததைக்கண்டு சிரித்தனர்என்பது முன்னிரண்டடிகளின் பொருள்.

கணிகையர் குலத்துப் பெண்ணொருத்தி நாள்தோறும் நீராடிநியமமாகத் திருமுருகாற்றுப்படையோதிய பின்னர் ஆடையணிகளால் அலங்காரம் செய்துகொண்டு செங்கோட்டுவேலரை மிகுந்த அன்புடன் தரிசனம்செய்து வழிபட்டுவந்தாள். அவளுடைய அணிகலன்களைப் பறிக்கவேண்டுமென்று நெடுநாள் எண்

ணியிருந்த திருடனொருவன் ஒருநாள் மாலைக்காலத்தில் மறைந்திருந்து அவள் மலையிலிருந்துவரும்பொழுது அவளுடைய அணிகலங்களைப் பறிக்க அவள் முன் சென்றான். வேறு துணையில்லாத அவள் தன்கையிலிருந்த "கொடிக் காம்புடன்கூடியபழைய வெற்றிலை யொன்றை" சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல் என்ற திருமுருகாற்றுப் படையடியைச் சொல்லி அத் திருடன்மீது விடவும் அது முருகன் அருளால் வேலாகமாறி அவனுடலைப்பிளந்துகொன்றது. வேலவர் வெளிப்பட்டு அவளுக்கு அருள்செய்தார் என்னும் பழையவரலாறு பின்னிரண்டடிகளில் அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர் சிறுபாணாற்றுப்படை 172, 173 அடிகளின் விசேடவுரையில் இதுபோன்ற வேறொரு வரலாறு காட்டியுள்ளார்.

2. மகுடகோடீரம் — சடாமுடி. நினை — உன்னை. தமிழ் உள்ளும் - தமிழ்ப்பாடல்களைச்சொல்லி நினைக்கின்ற. பதம் — பாதம். மயிடம் கரும்போத்து — பெரிய எருமைக் கடா. குழம்பு — சேறு. துகில் — பரிவட்டமாகிய ஆடை. பின் — பின்பும். பின் — அவ்வுழவன்பின், எய்க்கும் — ஒக்கும்.

முனி — அகத்தியர். சொல்தமிழ் — சொல்லிய தமிழ்ப் பாடலாகிய. தீகடு—கொடியவிடத்தை. அருத்தியது — நீ விரும்பியது. அருத்தியது எய்க்கும் என வினை முடிவுசெய்க. "என் தமிழ்ப்பாடலாகிய விடத்தை நீ விரும்பியது வேளாளன் பாதச் சேற்றையும் அவனுடைய எருமைக் கடாவின் காற்சேற்றையும் விரும்பிப் பின்சென்றதை யொக்கும் என்பது கருத்து.

கரிகாற்சோழன் செங்கோட்டுவேலவரைத் தரிசிக்கும் நியமமுடையவனாய்ச் சிலநாள் அம்மலையில் தங்கியிருந்தான். ஒருநாள் வேலவரைத் தரிசனம் செய்யும்பொழுது வேலவருடைய தூய்மையான பரிவட்டம் சேற்றால் நனைந்திருப்பதுகண்டு வருத்தமுற்று இவ்வாறு செய்தார் யார் என்று யோசித்து நின்றான். அப்பொழுது வேலவர் ஆகாயவாணியில் சோழனே; இம்மலைப் பக்கத்தில் என்பால் அன்புமிகுந்த வறுமைமிக்க வேளாளனொருவன் இருக்கின்றான். அவன் என்பால் அளவுகடந்த அன்போடு தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடிக்கொண்டு ஏரோட்டினான். அவன் அன்பினால் பாடிய அப்பாடல்கள் எனக்கு மிகவும் இனிமையாயிருந்தன. ஆதலின் அப்பாடலைக் கேட்டுக்கொண்டே அவனறியாதபடி அவன்பின் சென்றேன். ஆதலால் அவன் காற்சேறும் அவன் ஏரிற் பூட்டிய எருமைக் கடாவின் காற்சேறும் வாற்சேறும் என்மேல் தெரித்ததனால் என் பரிவட்டம் நனைந்தது என்று அவன் பெருமை கூறினார். அதனைக்கேட்டுவியப்பெய்திய சோழமன்னன் அவனையறிந்து அழைத்துவரச்செய்து அவன் வறுமைதிரும்படி அவனுக்குப் பெருஞ் செல்வங்களைத் தந்தான்

என்பது பழைய வரலாறு. இதுபோன்ற வேறொரு வரலாறு பழனியில் நிகழ்ந்ததாகக் கூறுவதுண்டு.

I காப்புப்பருவம்.

மூன்றாவது மாதத்தில் நிகழ்வது. குழவியைக்காக்குமாறு தெய்வங்களை வேண்டுவது.

திருமால் 1. திரு — இலக்குமி. தேம்கலுழ் — தேன் ஒழுகுகின்ற. அலங்கல் — மாலை. புரக்கும் — காப்பாற்றுகின்ற. இறை — திருமால். அஞ்சனம — மையை. மிலைஞ்ச — தரித்தாற்போன்ற. கருமஞ்சு அன்ன — கரிய மேகத்தை ஒத்த. விசஞ்சலம் — துக்கமின்மை. நிரஞ்சனன் — மறைப்பில்லாதவன். கதம்பமஞ்சரி — கடப்ப மாலை. மொய்ம்பு — தோள்கள். மூரல் — புன்சிரிப்பு. புனிறு — இளமை.

2. பிரணவம். பிரணவமாகிய ஓரெழுத்திற் பொருந்திய கடவுட் பொருள் முருகனைக் காக்க வென வேண்டுவது.

அறுபதம் — ஆறு கால். பொறி — புள்ளி, ஞிமிறு — வண்டு. அம்போருகம் — தாமரை. நாள்முகை — புதிய மொக்கு. பிலிற்றும் நறை — சொரிகின்ற தேன். ஆடகம் பூண் — பொன்னணிகலன். கடுக்கும் — ஒப்பாகின்ற. கல்லாரம் — செங்கழுநீர் மலர். துயில் — தூங்குகின்ற. ஆரத்த அத்திரி — சிவப்பாகியமலை; செங்கோடு. அடிகள் — குரு. சூட்டி — சிரசில் வைத்து. வேதன் — பிரமனுக்கு. தேனையுண்ட வண்டுகள் மகளிர் கண்போன்ற செங்கழுநீர் மலரில் தூங்குகின்ற செங்கோட்டு மலை என்க.

3. நாரி கணபதி. கலவிநாயகர். முருகன் அரைநொடியில் எழுலகங்களையும் வலமாகச் சுற்றிவர சிவன் பழம் நீயே என்றார். எழு தாத்திரி — எழுலகங்கள்.

4. கோதண்டபாணி — திருமால். நாபி — கொப்பூழ் கோகனகம் — தாமரை மலர். அண்டம் — உலகம். பகிரண்டம் — அண்டத்தின் வெளி. மூதண்டம் — பிரமாண்டம். வேதண்டம் — மலை. மதமா — யானை. பிபீலிகை — எறும்பு. வேலை — கடல், சூதம் — மாமரம். சைலம் — கிரவுஞ்சமலை. அடர்க்க — அழிக்க. போது அண்டு — தாமரை மலரைஅண்டிய. சத்தியன் — பிரமன்.

5. தேவேந்திரன். கவுள் கரை மதம் — கதுப்பிலிருந்து கரைந் தொழுகும் மதம். களிறு — ஐராவதம். ககனத்

தவர் — தேவர். வயிரம் — வச்சிரவாள். சத்தி — வேல். மழகுழவி — முருகன். "மழவுங்குழவுமிளமைப் பொருள்" தொல்காப்பியம்.

6. அகடு — வயிறு. சாலி — நெற்பயிர். சூல் — கதிர். தபனன் — சூரியன். தூக்கம் — தொங்கும் மாலை. அளி — வண்டு. பாசடை — பசுமையாகிய இலை. பான்மகவை — முருகன். தெருளாதகன்னி — பூப்புஅடையாதகன்னி. "பால்மொழி கன்னியாகும்" சிவஞான சித்தியார், சரோருகம் — தாமரை.

7. சததளம் — நூறிதழ். அம்புயம் — தாமரை. பறிதலைக்கண்டகர் — தலைமயிர்பறித்தலையுடைய சமணர். பழிச்செத்து — துதிக்கின்ற. பாகை — ஒரூர். சிவஞான வாரிதி — சிவன் என்னும் கருணைக் கடல். பணிப்ப — கட்டளையிட. புத்தேள் — தெய்வம். வலாரி — இந்திரன். பதயுகளம் — இரண்டு பாதங்கள் உரகம் — பாம்பு.

8. அழகு நாச்சியார் — தாருகனை அழித்தவள். மட்டிடு — மயங்குகிற. உளை அரி — பிடரிமயிருடைய சிங்கம் உற்று — அமர்ந்து. கதம் — கோபம். அரர்முன் — சிவன் முன்பு. வென் — முதுகு. கழு — வேல். மருமம் — மார்பு. முச்சிரத்தவன் — திரிசிரன். தசச்சிரன் — இராவணன். அகலம் — மார்பு. அனுசன் — தம்பி, கும்பகர்ணன். பண்ணவர் — தேவர். கேசவன் — திருமால். மருகன் — மருமகன்; முருகன்.

9. நால்வகைய — வசுக்கள். 8 உருத்திரர் 11 ஆதித்தர் 12 மருத்துவர் 2 என நான்கு வகையுடைய முப்பத்து மூவரென்க. பொன்னிலம் — பொன்னுலகம். கரடக் கடாம் — கரடமதம். கவுள் — கதுப்பு. கிம்புரி — தந்தப்பூண். களிறு — ஐராவதம். கூந்தலம்பிடி — தெய்வயானையம்மையார். அகலம் — மார்பு.

10. தாழை — தென்னை. துகிர் — பவளம். சாறு — திருவிழா. எடுத்த — தூக்கிய. பசுங்காம்பின் — பச்சை மூங்கிலால் ஆகிய. நச்சுக்குழல் — உண்டைவைத்தடிக்குங் குழல். செம்பழுக்காய் — சிவப்பாகிய கமுகங்காய்.

வாழையின்நீண்ட இலைச்சுருள்பச்சைமூங்கிலால்செய்தநச்சுக் குழலையும் அதன்மேல் படிந்துள்ள சிவந்த கமுகங்காய் அதில் வைத்தடிக்கும் மண்ணுருண்டையையும் போன்றதென்க.

11. வார் — கச்சு. களபம் — வாசனைச் சாந்து. வனசம் — தாமரை மலர். மருமம் — மார்பு. நிசிசர் — அரக்கர். மகபதி — இந்திரன். தவளம் — வெண்மை. கரிணி — ஐராவத யானை. சிறுமி — தெய்வயானை.

12. அசல மயில் — பார்வதி. புழல் — மீன். குழல்கள் — குழல்துளை. வாலிபநிரை — பசுக் கூட்டம். மதலை— கொன்றைமரம். குனித்து — வளைத்து. உதரம் — வயிறு குரம்பை — குடிசை.

13. நனைவிண்டு — அரும்பு விரிந்து. அபிராமம் — அழகு. பிரமகசம் — பிரமனை நாசம்செய்த. மீச்சடை — மேல்நோக்கிய வேர். கீழ் இணர் — கீழிடத்தில் பூங்கொத்து. படித்தப் படிவம் — அமைந்த வடிவம். கொக்கு — மாமரம். பரவை — கடல். விதித்து — படைத்து. விளிந்து — அழிந்து.

14. காமர் — அழகு. கொடுமுடி — மலையுச்சி. கணபணம் — படம். கட்செவி — பாம்பு. பூமகன் — பிரமன். அழல் — வேள்வித்தீ. கோமதகம் — சிறந்த வீரியம். கவை— பிளவு. தகர் — ஆட்டுக் கிடா. இது முருகனூர்தி.

15. அண்ணல் படிவம் — சிவன் வடிவு. பொன்சிமயம் — இமயமலை. மடவால் – பார்வதி. உரம் — மார்பு. கோதை – செங்கோடு. மூவர் — தேவார ஆசிரியர் மூவர்.

16. கேசரம் — பூப்பொடி. எழா — எழுந்து. சிறுகால் — தென்றல். புகா — புகுந்து. மகடு — பெண்கள். மாறல் — புதிது புதிதாக மாறிவருதல். யவனேர் — மிலேச்சர். தகர் — ஆடு. அழியா — அழித்து. மகவான் — இந்திரன். இகலா — மாறுபட்டு. மலைகாவலர் மூவர் — வீமனன். ஓவனன் இரங்கனன்.

2. செங்கீரைப் பருவம்.

ஐந்தாவது மாதத்தில் நிகழ்வது. குழவி ஒருகாலை மடக்கி மற்றொருகாலை நீட்டி இரண்டு கைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்ந்தாடுதல். அப்போது, மகளிர் செவ்விய மழலைச் சொற்களைப் பேசுவாய் என வேண்டுவர். செங்கீர் – செம்மையான மழலைச் சொல்.

1. மைக்குன்று திருமால். செக்கர்வானம் இலக்குமி. சுடர்க்கதிர் திருமாலின் மார்பிலுள்ள கவுத்துவமணி. மாதவக்

கடவுள் —திருமால். குஞ்சரம் — யானை. உழுவையதள் — புலித்தோல். கஞ்சுகி — ஆடை. மதலை — கொன்றைப் பூ. வெற்பு — மலை. முட்டியுற்று — நிலத்திலூன்றி. கந்தரம் — கழுத்து. இசை — புகழ். விண்டு — திறந்து. பணிமந்தரம் — செங்கோடு. செங்கீரையாடி — செம்மையான மழலைச் சொற்களைப் பேசி.

2. குரவர் — இருமுதுகுரவர், தாய் தந்தையர். கஞ்சம் — தாமரை. பொகுட்டு அலர் — பூங்கொட்டையையுடைய மலர். மறைக் கடவுள்கவில் — பிரமன் சொல்லிய. காகத்தின் மொழி வெறுப்பானது,, சினக் காக்கை வாயினுறுங்குரல் சொல்லொக்கும்,: மறைசையந்தாதி. குறுமுனி — அகத்தியர்.

3. காவிரிச் சிறப்பு. குடம்குவடு — மேற்கிலுள்ள குடகுமலை. இடித்து — இடியிடித்து. குடில் — குடிசை. சூறையாடி — சுழலச் செய்து. இபக்கோடு — யானைத் தந்தம். தரளம் — முத்து. பணை — மூங்கில். சுடிகை — உச்சி.

பிலி — மயிற்றோகை. வரன்றி — வாரி. குரம்பு — வரப்பு. அறலைத்து — வழிப்பறிசெய்து. வரைக்குவடு — மலையுச்சி. உளக்கும் — வருத்துகின்ற. பொன்னி — காவிரி.

4. செருத்தல் — முலைமடி. கருங்கவரி — எருமை. நூபுரம் — சிலம்பு. இளமழவு — மிகவும் இளமை. மின்னார் — மகளிர். வடம் தரளம் — மாலையிலுள்ள முத்துக்கள். புடவி — பூமியில். உடுவில் — விண்மீன்களைப்போல. பிறங்க — விளங்க. அமல நறவு — தூய்மையான தேன். கடைசிமார் — மருதநிலத்து உழவர் மகளிர்.

5. துத்தி — புள்ளி. பைப்பணம் — நச்சுப்பை. மணி — மாணிக்கம். துயிலுணர்ந்து — தூக்கம் தெளிந்து. துவர் — சிவப்பு. பங்கய ஆனனம் – செந்தாமரை மலர்போன்ற முகம். குடங்கை – உள்ளங்கை. களத்திடை – கழுத்தில். மீப்படுத்த – மேல்வைக்க. மதலை – குழந்தை.

6. பிளிற்றும் – கொப்பளிக்கிற. வான் இடுவில் – இந்திரதனு. தூற்றில் – தூறுபோல. குயம் – அரிவாள். ஈழ்த்து – இழுத்து. தத்தி – மோதி. பெருங்கால் – பெரிய வாய்க்கால். மடுப்ப – நிறைக்க.

7. வார் – கச்சு. கோடு – மலையுச்சி. பிணையல் – பூமாலை. ஓதிமம் – அன்னப் பறவை. மேகலை – மேகலாபர

ணம். பொலம் – பொன். மறுகு – வீதி. சுரும்பர் – வண்டுகள். பாண் – இசை. இசைநேர் – இசைப் பாடலுக்கு ஒப்பாகின்ற.

8. கலபம் – மயிற்றோகை. தோகை – மயில். மணிமிடறு – நீலநிறமான கழுத்து. மகரம் குழை – மகர மீன் வடிவான காதணி. சுட்டி – நுதலணி. முகமண்டலம் – முகம். ஓகை – மகிழ்ச்சி. மதாணி – மார்புப் பதக்கம். அங்கதம் – தோளணி. வாகு –தோள். கிண்கிணி – சிறு சதங்கை. ஆரண நூல் – வேதம்.

9. பணுமணி – மாணிக்கம். உறழ – ஒப்ப. வால்வளை – வெண்மையாகிய சங்குப் பூச்சிகள். உளையா – வருந்தி. தாளம் – முத்து. நிலவு – நிலாவொளி. பதம் – சமயம். சலசம் – தாமரை. குவளைமுகை – குவளையரும்பு. அவிழ்தர – விரிய. தலைஇய – தலைப்பட்ட.

10. கண்டல் – தாழை. கமலமலர்க் கிழவன் – பிரமன். கரி – சாட்சி. கறைக் கிரிவம் – விடம்பொருந்திய கழுத்து. இணர் – பூங்கொத்து. அலம்பு – ஒலிக்கின்ற. மந்தாகினி – கங்கை. வந்த – தோன்றிய. மாவெலி – மாபலிச் சக்கரவர்த்தி. முன்றில் – அரண்மனையின் முன்னிடம்.

3. தாலப் பருவம்.

இது எழாந் திங்களில் நிகழ்வது. குழவியைத் தொட்டிலிலிட்டு மகளிர் நாவினுற் பாடும் பாடல்களுடன் தொட்டிலாட்டும் பருவம்.

1. விகர்த்தன் – சூரியன். உளை – பிடரிமயிர். உடு – விண்மீன். பொர – ஒப்பாக. தாழை – தென்னை. அளி – வண்டு. வெடிபோந்து – ஒலியுண்டாகும்படி மேலே சென்று. இழி – கீழேவருகின்ற. மறுகு – வீதி. அரம்பை – வாழை. வழ்ந்த – ஒழுகிய. அலவன் – நண்டு, பூனையுமாம்.

2. பாந்தள் – ஆதிசேடன். இரும் சூடு – பெரிய உச்சி. பரிக்கும் – தாங்குகின்ற. சமயர் – பல மதத்தினர். கண்டித்து – கடிந்து. மறைக் கிழவன் – பிரமன். கடி – காவல், சிறை. பணிப்பூண் – பாம்பாபரணம். குழகன் – அழகன், இளமையுடையவன்.

3. முள்தாள் – முள்ளையுடைய தண்டு. நாரம் தடம் – நீரையுடைய தடாகம். நடவு – பயிர். புறவு – குறிஞ்சி நிலம். கடிநீர் – தேன். கருங்கால் – கரிய அடி. கழைசாடி – கரும்பை

ஒடித்து. கலவம் மலை — மயில்களையுடைய மலை. அயில் நீர் — உண்கின்ற நீர். செழுமும் — பொருந்திய, நிறைந்த.

4. புழை — துவாரம். கறையடி — யானை. அயிரா பதப்பாகன் — இந்திரன். முழைவாய் — குகையின்வாயை. பொருவும் — ஒப்பாகின்ற. மூரி — வலிமை. எக்கர் — மேடு.

5. முருகன்தோற்றம். சதமகத்தோன் — இந்திரன். கிரி — மேருமலை. பரசோன் — சிவன். இந்தியம் — வீரியம். பன்னியர் — மனைவியர். நிமலை — பார்வதி. நிவர்தாள் — நீண்டபாதம். தைவர — தடவ.

6. வண்டல் — சேறு, மகளிர் விளையாட்டுச்சிற்றில். சுழி — நீர்ச்சுழி. கமுக அடவி — கமுகந்தோட்டம். செஞ்சாலி — செந்நெல். சிவை — வேர். சினை — கருப்பம்.

இறையனார் களவியலுரை வரலாறு

7. வளஞ்சியர் — வணிகர். பொருள்நிலைவழுவ —'அகப்பொருளிலக்கணம் தவறிப்போக. வழுதியர்கோன் — பாண்டிய மன்னன். திருமுறை — நூல். உய்ப்ப — கொடுக்க. உழை — மான். அன்பினைந்திணை — இறையனார்களவியல்நூல்.

8. முசுக்கலை — ஆண்குரங்கு. மந்தி — பெண்குரங்கு. இளம்பறழ் — இளங்குட்டி. கடுவன் — ஆண்குரங்கு. எகினம் — அன்னம். நக — சிரிக்க.

நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியது.

9. குரை — ஒலி. திரை — அலை. முகை — மொக்கு. கூலம் — நீர்க்கரை. அரசு — அரசமரம். மண்பகுதி — மண்ணில்விழுந்தபாகம். நிஷ்டை — நக்கீரருடையசமாதி. முழை — குகை. வரைபக — மலைபிளக்கும்படி. வடிதமிழ் — தெளிந்த தமிழ் நூல்; திருமுருகாற்றுப்படை.

10. பொழில் — சோலை. பரிபுரம் — சிலம்பு. விழவு — விழா. பளிதம் — பச்சைக்கருப்பூரம். நறை — மணம். சுணம் — வாசனைப்பொடி. மான — ஒப்ப. பணை — வயல். உழத்தியர் — கடைசியர். உரகசயிலம் — நாககிரி.

4. சப்பாணிப் பருவம். ஒன்பதாந்திங்களில் நிகழ்வது. குழவியின் இரண்டுகைகளையும் பொருந்தக்கொட்டுமாறு கூறுவது.

1. கூன் — வளைவு. உளைய — வருந்த. கமடம் — ஆமை. அள்ளல் — சேறு. குடும்பு — குலை. அலம் — கலப்பை. கடம்பனை — பெரியவயல். வெள்ளிடை அற — வெற்றிடம் இல்லாமல். பார்ப்பு — குஞ்சு. மந்தாகினி — கங்கை.

2 மால் — மதமயக்கம். கரி — யானை. கடாம் — மதம். குடுமி — உச்சி. பொலங்குவடு — பொற்சிகரம். அயர் — விளையாடுகின்ற. எனல் — தினை. புண்டரீகம் — புலி. பறழ் — குட்டி. அமுதம் — பால். உயிரா — மூச்சுவிட்டு. பணை — கிளை. கவடு — கிளை. சாய்கை — கிளை. உதவி — கொடைப்பொருள். ஆள் + நர் = ஆணர் — ஆள்பவர்; தேவர்கள். மதலை — குழவியே.

(3) செங்கோட்டுஅதிசயங்கள். பதுமபீடிகை — தாமரைமலர்ப் பீடம். முனிவரன் — பிரமன். செங்கேழ்முளரி — செந்நிறமுடைய தாமரைமலர். முராரி — திருமால். மகிடாரி — துர்க்கை. பலி — பூசை. வந்தியாகுன்றம் — மலடிகல். பிலத்துவாரம் — காஞ்சிபுரவழியாம் நற்பிலத்துவாரம், (திருமுக) ஐஞ்சோதி — அழகியஒளி, பஞ்சவர்ணம். கூவம் — சோழன் தாபித்த கூவம், திருமுகவிலாசம்.

4. வேலவர் கரிகாலனுக்கு உண்மையுரைத்தது. புறவினுக்கு — புறுவைக்காப்பாற்றும் பொருட்டு. சிறைபுக்க — தராசுத்தட்டில் ஏறியிருந்த. கொழி — ஆராய்ந்த. அம் — அழகு பொருந்திய. கோமகன் — சிபியின் மரபில் பிறந்த கரிகால் சோழன். பார் — பூமி. கவைக்கால் — பிளவானகுளம்பு. கரும்போத்து — கரியஎருமைக்கடா. சேதகம் — சேறு. வாலுதி — வால், வாலதி என்றும்பெயர். கலவை — சேறு. பரிவட்டம் — ஆடையை. என்கொல் — என்ன காரணமோ. உள்ள — சோழன் நினைக்க. அசரீரி — ஆகாயவாணி. குணத்தன்முன் — வணமுடைய சோழனிடம். வருநெறி — சேறுவந்தவழியை. குன்கலி — வலிய வறுமை. திரு — செல்வத்தை. வால் — வெண்மை. தறுகண் — கொலைக்குணம். சிறுவ — மகனே.

5. மருதநிலம். ஊழ்த்த — முதிர்ந்த. கன்னல் — கரும்பு. படப்பை — தோட்டம். அள்ளல் — சேறு. உகளித்து — குதித்து. நீத்தம் — வெள்ளம். தடவு சினை — பெரிய கிளை. சூதம் — மாமரம்.

6. மழைச் சிறப்பு. கார் — மேகம். புவிகண்டவன் — பிரமன். உருவம் — வெண்ணிற வடிவம். வேலை முந்நீர் — கடல். அறல் — நீரை. உலகுண்டவன் — திருமாலின். சொரூபம் — கருநிற வடிவம். மீது — மேல். தடாம் — தடாகம். இம்பர் — இவ்வுலகோர் — உம்பர் — மேலுலகோர். எம்பர் — வேறு, எல்லாவுலகிலுமுள்ளோர்.

7. மகளிர்சுனை நீராடல். மங்குல் — மேகம். வதனம் — முகம். செந்துவர் — சிவப்பாகிய பவளம். பணைபொரு — மூங்கிலை ஒத்த. களபம் — கலவைச் சாந்து.

8. நக்கர் — சிவன். தமம் — இருள். சுடர் — ஒளி. ஆவணம் — உரிமை.

9. மஞ்சரி — பூங்கொத்து, மாலை. மிஞ்சி — மிகுந்து. மலைந்து — மாறுபட்டு. மிலைந்து — தரித்து. தெளி — தேன். கால் — வாய்க்கால். சேவலவ — சேவற் கொடியுடையவனே. மஞ்சு — மேகம். சேண் — வானம். வலாரி — இந்திரன். உகைத்து — செலுத்தி. மத்தம் — மத்தகம். கயம்பிடி — ஐராவதம். குஞ்சரி — தெய்வயானை. தைவரும் — தடவுகின்ற வடு — மாவடு.

10. மேய — போன்ற. எயிறு — பல். பிணை — பெண் மான். அவுணர் — அசுரர். தறிபட — அறும்படி. மாவுடல் — மாமர வடிவம். தொடர் — மாலை. முதுமங்கை — வயது முதிர்ந்தவள். நிநீஇ — நிறுத்தி. அயில்பாடி — வேலைப் புகழ்ந்து பாடி. வெறி அயரும் — வெறியாடலைச் செய்கின்ற. குயம் — முலை.

5. முத்தப்பருவம். பதினொன்றாவது திங்களில் குழவியை முத்தமிடுமாறு வேண்டுவது. முத்தம் — வாயிதழ்.

(1) இளை நெல் — மூங்கில் நெல். இடி — மா. அயில் முன் — உண்பதற்கு முன்பு. அதிதி — விருந்தினர். பலி — பிச்சை. கணத்தவர் — தேவகணத்தார்.

(2) சுழி — நீர்ச் சுழியல். புனல் — நீர். தடம் — தடாகம். முகை — அரும்பு. துதை — நெருங்கிய. படுகர் — வயல். வரன்றி — வாரி. இயல்சொல் — இலக்கண நூல்.

(3) சகடு — சகடாசுரன். அகடு — வயிறு. பலவு — பலா. தேம்பழுத்த் — இனிமைமிகுந்த. இதழ் ஊறல் — வாயிதழில் ஊறும் நீர். பகடு — யானை. பரல் — பருக்கைக் கல். கிண்கிணி — சிறு சதங்கையாபரணம். முகடு — உச்சி. பமரம் — வண்டு,

(4) கடி — உடுக்கை. இறும் — ஒடியும். நூபுரம் — சிலம்பு. அனுங்க — அசைய. வளை — வள்ளை இலைபோன்ற. காது .குமிழ் — குமிழம்பூப்போன்ற நாசி. மறிந்து — மடங்கி. பதம் — கால்கள். புயங்கம் — பாம்பு. வள்ளல் — சிவன். சிறுமூரல் — புன்சிரிப்பு. கடுக்கும் — ஒப்பாகின்ற.

5. பனி உந்திய — குளிர்ச்சி பொருந்திய. நேயம் — நெய். பொதுவர் — இடையர். தாம்பு — கயிறு. பாா அரை — பருத்த அடி. கறை — உரல். பிணிப்பு — கட்டியதை. மருது — மருதமரம். சகடு — சகடாசுரன். புள்வாய் — பறவையின் வாய். பூதம் — பூதகி. கனிஉந்திட — விளாங்கனி உதிர. வாரணம் — குவலயாபீடம் என்னும் யானை. இறுத்து — கொம்பை ஒடித்து.

6. திரைப் பரவை — அலைகளையுடைய கடல். இப்பி — முத்துச்சிப்பி. கமம்சூல் — நிறைவாகிய கருப்பம். கடுபை — நச்சுப்பை. பூகம் — கமுகு. களம் — கழுத்து. சொலியின் சிவை — நெற்பயிரின் வேர். கழை — மூங்கில். குரண்டம் — கொக்கு. சுதை — அமுதம். ஒப்பம் — சமன்.

7. வார் உந்தி — கச்சைத்தள்ளி. வனம் — அழகு. மோடு — பெருமை. வால் — வெண்மை. துளும்ப — அசைய. இறை — சிவன். நீபம் — கடம்ப மலர். தகை — அசைகின்ற. தடவு — பெரிய. பழிச்சி — புகழ்ந்து. சதமகன் — இந்திரன். விபுதர் — தேவர்.

8. குஞ்சர ஆனனம் — யானைமுகம். தமனியம் — பொன். மணி — அழகு. சடாடவி — சடைக்காடு. வரைமடந்தை — பார்வதி. கோகனகம் — தாமரை. மாமி — இலக்குமி. பாமடந்தை — கலைமகள். மா — மாமரம். வரை — கிரவுஞ்சம்.

9. அயிராணி — இந்திரன் மனைவி. காமக் கிழத்தி — மனைவி. இணை விழைவு — புணர்ச்சி. பொற்பகம் — பொன்னுலகம். மகபதி — இந்திரன். குழல் — கூந்தல். வில்பக — வில்லைப் பிளக்காற்போன்ற. நுதல் — புருவம். வெயில் — சூரியன். ஓர்பதம் — ஒப்பற்ற ஒளி. அல் — இரவு. அரிய — கூடாத.

10. நறவம் — தேன். அலங்கல் — மாலை. மலய மாருதம் — தென்றல். கமலத்தணங்கு — திருமகள். மூசும் — படிந்திருக்கின்ற. ஏகாசவாசம் — மேலாடை. துவைக்கும — ஒலிக்கும். கொண்டல் — மேகம். அண்டம் — நீலவானம். பவப்புணரி — பிறவிக்கடல். துவர்பழுத்த — சிவப்பு நிறம் முதிர்ந்த.

6. வாரானைப் பருவம். இது பதின்மூன்றாந்திங்களில் நிகழ்வது. வாரானை — வருகை. தோழியர் முதலியோர் சிறு நடைநடந்துவருமாறு குழவியை அழைத்தல்.

1. பணை — பருத்த. பூண் — ஆபரணம். வனசம் — தாமரை. சிறுபிடி — தெய்வயானையார், அசலம் — மலை. மெய் திமிர்ந்து — உடம்பிற்பூசி. திருத்தல் — அணிதல்.

2. தண்ணம் — குளிர்ச்சி. கதம்பம் — கடம்பமலர். தொடையல் — மாலை. குஞ்சி — குடுமி. சுடிகை — நெற்றிச்சுட்டி. குதம்பை — காதணி. குழை — காது. பரிக்க — தரிக்க. பதாணி — பதக்கம். உரம் — மார்பு. பாணிவளைய — கையில் தரிக்க. கிண்கிணி — இடையணி. கழல் — கண்டை. கலிப்ப — ஒலிக்க. கண்ணேறு — திருஷ்டி. மைக்காப்பு — மையாகிய காப்பு. காப்பு — பாதுகாவல்.

3. **சோலை நாட்டியசாலை.** முழவம் — மத்தளம். சாதகம் — வானம்பாடி. கவுத்தம் — சிச்சிலிப்பறவை. எழினி — திரைச்சீலை. தயக்க — காட்ட; விளங்க. தழீஇப — தழுவிய. ஓதிமம் — அன்னம். கண்பரப்ப — கண்விரித்துப்பார்க்க. கொன்றை — கொன்றைமரம். கனகம் — பூக்களாகிய பொன்னை. எதிர்வழங்கும் — எதிரில் சொரியும்.

4. குடம் — மேற்கு குன்று — குடகுமலை. இடித்து — ஒலித்து. கவரி — கவரிமான், எருமையுமாம். ஒருத்தல் — ஆண் யானை. களபம் — யானைக்கன்று. பிடி — பெண்யானை. பலவு — பலாமரம். மூரி — பெருமை. தாழைவனம் — தென்னஞ் சோலை. கழைப்படப்பை — கரும்பின் வயல். முதலைக் களைந்து — வேரைப்பிடுங்கி. கடைசியர் — உழத்தியர். கவின் — அழகு.

5. களிறு — ஆண் யானை; கசேந்திரன். கரா — முதலை. அடர்ந்து — கொன்று. வெரு — அச்சம். கமலத்திறை — பிரமன். பொரு இல் — ஒப்பில்லாத. தெரிவை — திரௌபதி. நாப்பண் — நடுவில். சிலை — கல். மேதை — அகலிகை. மாதவன் — விசுவாமித்திரன். சாபம் — வில். இறுத்தோன் — ஒடித்தோன். மடமான் குழலி — வள்ளிநாச்சியார். மழவன் — இளமையுடையவன்.

6. சுரிகுழல் — சுருண்ட கூந்தல். பருமம் — மேகலாபரணம். பதயுகம் — இரண்டுபாதம், பரிபுரம் — சிலம்பு. ஊையல் — மாலை. பகறி — ஒலித்து. வறிது — வீண். தரு — கற்பகமரம், அணிதர — அழகு செய்ய அளகம்மிசை — கூந்தலின்மேல். துயல் வர — அசைய. குருகு — அன்னம். இகண் — காவல் பரண்.

7. களவ நகை — முத்துப்போன்றபல். இலவிதழின் — இலவம்பூவிதழ் போல. இதழ் — உதடு. தமரம் — ஒலி. முரல் — ஒலிக்கின்ற. பமரம்ஆர் — வண்டுகள் நிறைந்த. தகரம் — மயிர்ச்சாந்து. சுரியல் — கூந்தல். உருபணி — அழகியஆபரணம். அமைதி — சமயம். உயர்நிலை — மலையுச்சி. நிறைகொடு — வரிசையாய். களவுகொடு — களவு மணம்செய்துகொண்டு. எனல் — என்று சொல்வதைவிட. கவரும் — திருடுகின்ற. வெரீஇ — பயந்து. கனியர் — கன்னியர். இரிதர — ஓட. மதகரி — விநாயகராகிய யானை. கடவி — தூண்டி. மறுகிடை — வழியில். நடவிடும் — நடக்கவிட்ட. குளவன் — மலைப்பச்சையை அணிந்தவன்.

8. நிவரும் — உயர்ந்த. நெடுவரை — கிரவுஞ்சமலை. அகலம் — மார்பு. பக — பிளக்க. நெறிவிரவ — வழியுண்டாகும்படி. அயில்தொடு — வேலைவிட்ட. துருவும் — தேடுகின்ற. மிகுதுனி— மிகுந்தவூடல் (நீங்கி). களிவர — மகிழ்ச்சியுண்டாக.

9. தவளம் – வெண்மை. இரசிதகிரி – வெள்ளிமலை. தபனன் – சூரியன். தனு – வில். விடை கடவும் – எருத்தைச் செலுத்துகின்ற.

10. அரைய – தேய. புழைபட – துளைபட. வழி – வழிகின்ற. புனல் குடை தொறும் – நீராடுந்தோறும். செவலி – செவ்வாம்பல். குவளை – கருங்குவளை. திகிரி – சக்கரம். விமிதம் – உவகை. திமிரும் – பூசிய. அரிசனம் – மஞ்சள். நறை – மணம். உகள்தர – குதிக்க. குமுதசகன் – சந்திரன். அறை – மலையுச்சி. கமழ்தரு – தோன்றுகின்ற.

7. அம்புலிப் பருவம். இது பதினோந்தாவது திங்களில் நிகழ்வது. இது சந்திரனைக் குழவியுடன் விளையாடுவதற்கு வருகவென்று அழைப்பது. அம்புலி – சந்திரன்.

1. இது தானம் கூறுவது. மாகம் – வானம். அணவும் – தோய்ந்த. கருங்கோடு – கரிய கொம்பு. கருங்கவரி – கரிய எருமை. உள்ளி – நினைத்து. புலிப்பறழ் – புலிக்குட்டி. முழை – குகை. புக்கு இழிய – புகுந்து ஒழுக. சீகரம் – நீர்த்துளி. தரங்கம் – அலை. பரவ — பரவுதலால்.

2. இதுவும் தானம் கூறுவது. பூரணை நாள் – பௌர்ணமி. பாந்தள் – இராகு தானவர் – அசுரர். முதுக்குறைவு – பேரறிவு. ஆதரவு – விருப்பம். தேர்ந்து – அறிந்து.

"பிள்ளைத்தமிழ் .... புராணச்செய்யுளுண்டு" இவ்வடிகளுடன் "கவிராசனிப்பிரான் மிசைச்செய்த திருவுலாக்

கவிவெள்ளை கற்றுருகலாம்
கவிவீர ராகவன் சொற்றபிள்ளைக்கவி
கலம்பகக் கவிவினவ லாம் "

— சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் அம்புலி - 10 ஒப்பிடுக.

3. அரவிந்தம் — தாமரை. தேறல் — தேன். கால் — வாய்க்கால். உகளம் — சோடியாக. தாழை — தென்னை. ஊழ்த்து — உதிர்த்து. பெருந்தாங்கல் — பெரிய நீர் நிலை. குடைந்து — முழுகி. புள்குலம் — பறவைக் கூட்டம்.

4. முருகு — தேன். முத்தம் — முத்துப்போன்ற மொக்கு. உம்பர் — வானுலகம். உடன்று — கோபித்து. அகன்றில் — அன்றில் பறவை. காளம்கொள்ள — கொம்பூத. மோடு — பெருமை. மேதி — எருமைகள். வெருகோடு — பூனைகளுடன். கருப்பைப் பறழ் — எலிக் குட்டிகள். பனிப்பு உறு — அச்சம்கொள்ளாமல். வெரூஉம் — அஞ்சுகின்ற. புல்வாய் — மான். அருகோடு — பக்கத்தில், வேற்றுமை மயக்கம்.

5. இது சமம் கூறுவது. ஓகை — மகிழ்ச்சி. இரவு — இராக்காலம்; சூரியனிடம் ஒளியை இரத்தல். இரவை — அறியாமையாகிய இருளை, பிறரிடம் இரத்தலை. ஒளி — பிரகாசம். புறத்தில் ஒளி. ஓங்கு ஒளி — உயர்ந்த அறிவொளி. சாகை — கிளை. மழுக்குண்டது — பொலிவிழந்தது. மாசுணவரை — நாககிரி.

6. இது பேதம் கூறுவது. இணையுற — ஒப்பாக இருத்தலால். முயல் உறும் சிறு மறுவு — முயல் வடிவமாகிய சிறிய களங்கம். பணம் — படம். பாந்தள் — இராகு. அரிய — கெடுக்கும்படி. உள்ளில் — நினைத்தால்.

7. திகிரி — சூரியனும். மாவிண்டு — பெரிய மேகமும் நாஞ்சில் — 'இவன் மதின்மேல்' உறுப்புக்கள். பண்ணவர் — தேவர். ஏனோர் — மற்றவர். பழந்தொழும்பினர் — பழைய அடியார்கள். பரிசனம் — அடிமைகளாய், பரியாள் — ஏவல்வேலை செய்வோர். அமைச்சர் — அமைந்து நடப்போர். பச்ணிசயிலன் — அரவகிரியோன்.

8. கட்கடை — கடைக் கண். கவிர் இதழ் — முள்முருக்கம் பூவின் இதழ்போன்ற. துவர்வாய் — சிவப்பாகிய உதடு. நானம் நெய் — புழுகு நெய். நுசுப்பிடை — இடுப்பு. நுடங்க — அசைய. நூபுரம் — பாதச் சிலம்பு. மேகலை — இடையணி. சேதகம் — குழம்பு.

9. மலகரி — ஓர்பண். அம்புயம் — தாமரை. குரம்பு — வரப்பு, அணை. கூலம் — நீர்க்கரை. கமம் சூல் — நிறைவாகிய கருப்பம். வெயில் — ஒளி.

10. இது தண்டம் கூறுவது. இகல் - போர். வயிரப்படை — வச்சிரவாள். கடிநகர் — வீர மகேந்திரபுரி. தயித்தியன் — சூரன். வளர்விடம் பணி — வளருகின்றவிடத்தையுடைய பாம்பு.

8. சிற்றில் பருவம். இது பதினேழாவது மாதத்தில் நிகழ்வது. சிறுமியர் கட்டிய சிறு வீடுகளையழித்தல்.

1. திரிபதகை — கங்கை. சூடு — உச்சி. அகி — பாம்பு. குளம்தீ — நெற்றியிலுள்ள தீ. ஓர்பகுதி — ஒப்பற்ற இடதுபாகம். கரந்து — மறைந்து. விமலை — அம்பிகை. துணை —இரண்டு. மணி — அழகு. சேர்ப்பா — கணவனே.

2. தறுகண் — அஞ்சாமை, கொலைக்குணம். புகர் — புள்ளி. பனைக்கை — பனைமரம்போன்ற துதிக்கை. "பனைக்கை மும்மதவேழமுரித்தவன்." "தேவாரம். மதம்கலுழி — மத வெள்ளம். இழி — ஒழுகுகின்ற. நியமம் — வீதி. இழுக்குற — வழுக்கிவிட. விழவு — வசந்த விழா. களபம் — சுண்ணச் சாந்து. சுணம்பொடி — சுண்ணமாகிய பொடி. சேதகம் உற்று — சேறாகி. இப்பாடலுடன்

'சோறுவாக்கிய கொழுங் கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகி, யேறு பொரச் சேறாகித், தேரோடத்துகள் கெழுமி, நீறாடிய களிறு போல, வேறுபட்ட வினையோவத்து, வெண்கோயின் மாசூட்டும்'' பட்டினப்பாலை 44, 50 இவ்வடிகளை நோக்குக.

3. உவதி — இலக்குமி. தாக்கும் — போரிடுகின்ற. வனம் — அழகு. குழுமி — கூடி. தாவா — ஒழியாமல். அங்குரி — முளை. அகன் அட்டில் — அகன்ற சமையல் வீடு. பதத்தின் — சோற்றிலிருந்து, பக்குவத்திலெனினுமாம். வெம்மை + யவாகு — வெய்யவாகு. யவாகு — கஞ்சி. 'கஞ்சியவாகேகாடி மோழை' பிங்கலந்தை. "புகழ்நிலைஇய மொழிவளர, வறநிலைஇ யவகனட்டிற், சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப்பரந்தொழுகி'' பட்டினப்பாலை. 42—45. ஒப்பிடுக. அமலை — ஆரவாரம். கமலம் — நீர். கோதை — திருக்கொடிமாடச்செங்குன்றூர்

4. கழி — உப்பங்கழி. கண்டல் — தாழை. வண்டல் — விளையாட்டுச்சிற்றில், நதிக்கரை. குறை — ஆற்றிடைக்குறை. கழை — கரும்பு. சோலின் நடல் — நெல்நாற்று. கமர் — நிலப்பிளவு. குமரி — கற்றாழை. சுழி — நீர்ச்சுழியல்.

கமலக்கமலம் — நீரிலுள்ள தாமரை. பணிலம் — சங்குப்பூச்சி. சாலி — நெல். செங்குரல்அரி — செங்கதிர்களாகிய அரி. கொற்று — கதிரறுப்பவருக்குக் கொடுக்கும் கூலி, "கூலஞ் சுமக்கக் கொற்றுளாகி"; கல்லாடம். 49.

5. பசைந்த — நெய்ப்பேறிய. மறுகால் — வேறுதாங்குகால். இடையிடை — இடுப்பில். மாற்றம் — பேச்சு. உவரி — கடல். கலிப்ப — ஒலிக்க. மதன் — மன்மதன்.

6. முதுமகன் — பிரமன். விடைகடவு — எருத்தைச் செலுத்துகின்ற. விரகு — சூழ்ச்சி; வலிமையுமாம். வரலாறு — வந்தமுறை. உழை — மான். விடை உயர்த்த — இடபத்தைக் கொடியாக உயர்த்திய "வெள்ளேறு வலவயின் உயரிய" திருமுருகாற்றுப்படை. 151. 2. முதல் — சிவன். விதித்த — சொல்லிய.

7. அகிலர் — மனிதர். ககனத்தர் — தேவர். உரகேசர் — நாகர். குழை — காது. குமிழ் — நாசி; உவமையாகுபெயர். கறுவி — முனிந்து. உகளித்து — பாய்ந்து. குலமலை — கூட்டமாகிய மலைகள்.

8. கழைமணி — கரும்பீன்ற முத்து. புகர்முகம் — யானை. மருப்பு — கொம்பு. உகு ஆரம் — சொரிகின்றமுத்து. பொன் — பொற்பொடி. அறல்கொழிக்கும் — நீர்ஒதுக்கும். பொன்னி — காவிரி. மருது — மருதமரம். குரு — நிறம். விளக்கம் — விளக்கு.

9. அரிவதனம் — குதிரைமுகம். அவுணன் அவனுக்கு — சூரபன்மனுக்கு. உளைமுகத்த — சிங்கமுகத்தையுடைய. உளை—ஆகுபெயர். பல்— பல; இரண்டாயிரம். புயத்து — தோள்களையுடைய. அசுரனோடு — சிங்கமுகனுடன். இளையனாகிய அசுரன் என்க. உழை — இடம். தயித்தியன் — சூரபன்மன். உவரி — கடல். வெற்பு — மகேந்திரமலை மா — மாமரம். அரிதர —அழியும்படி. சத்திதா—வேலைத்தரித்தவனே.

10. வகுளம் — மகிழமரம். கோலி — அமைத்து. அட்டில் — சமையலறை. குழிசி — பானை. தரளம்வல்சி — முத்துக்களாகிய அரிசி. புகட்டி — உள்ளேபோட்டு. கொதுமல் — அயலார்; விருந்தினர். அயிலாமே — சாப்பிடாமல். பதி — மகேந்திரபுரி. கடவுளரசு— தேவர்களின் இளவரசன்; சயந்தன். கடிமனை — சிறைச்சாலை. சிதைபெல்— அழிக்காதே.

9. சிறுபறைப் பருவம். பத்தொன்பதாந் திங்களில் நிகழ்வது. சிறுபறையடிக்குமாறு வேண்டுதல்.

1. ஆரணம் — வேதம். இசை — புகழ். அம்புயன் — பிரமன். ஆகண்டலன் — இந்திரன். ஆவலம் முழக்க — வாயால்ஆரவாரித்துப்பாட, "விண்மேல்ஆவலங்கொட்டிச்செல்ல". கந்தபுராணம். நேமி — சக்கரம். நளினம் — தாமரை. மின்— இலக்குமி. மதத்தொனி — மதத்தினுற் செய்யும்பேரொலி.

2. வாரிசம் — தாமரை. மணம் உண்ட — கூடியுள்ள மணி — கவுத்துவமணி. மாதவக்கடவுள் — திருமால். நெருநல் – நேற்று, முன்பு. அவுணன் – இரணியாட்சன். வராகவதாரம் – பன்றிப்பிறப்பு. கீன்று – பிளந்து. பார்மகள் – பூமி. உவர் – உப்பு. வலவருத்து – மிகுந்த வருத்தம். பாழி – பெருமை.

3. நறுந்தொடர் – நல்ல மாலை. பொன்வினைஞர் – தட்டார். புனை – அழகு. மணி இழை குழாம் – இயற்கையான இரத்தினுபரணங்களை. "கைபுனைந்தியற்றுக்கவின்பெறுவனப்பின், நாவலொடு பெயரியபொம்புனையவிரிழை" திருமுருகாற்றுப்படை. கைபுனைகலா – கையாற்செய்யப்படாத. கடவுட் கொழுஞ்சுண்ணம் – இயற்கையாயமைந்த தெய்வத்தன்மைபொருந்திய வாசனைப்பொடி. பிடிக்குலம் – தெய்வப்பெண்கள். மாமகளிர் – மானிடமகளிர். அவுண்செற்ற – அசுரரையழித்த. குரவை – குரவைக்கூத்து, மகளிர் கைகோத்தாடுதல்; கடல்போல எனினுமாம். துவைபட – ஒலியுண்டாக. மகளிர் குரவையாடலில் வேல் பாடுதலை "சிலப்பதிகாரம் குன்றக்குரவையிற் காண்க.

4· கன்னல்கு – கரும்பினை. அழித்தும் – வெட்டியும். அட்டு – காய்ச்சி. பழுக்காய் – கமுகம் பழம். கறித்து – கடித்து. பகடு – எருது, எருமைக்கடா. அலம் – கலப்பை, ஏர். தொட்டு – தோண்டி. பன்னல் – பருத்திச்செடி. கைவினை – செய்தொழில். நடவு – நாற்று. எதிர் – எதிராகக் கொடுக்கும் கூலி.

5. முதுநூல் – வேதம். ஆகமம் – சிவாகமங்கள். அங்கம் – வேதாங்கம். முத்தமிழ்ப் பகுதிகள் இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளன.

6. தகரம் – மயிர்ச்சாந்து. சலிலம் – நீர். முதுபங்கம் – பழஞ்சேறு. மேனியென்பதை மேனீனத்திருத்துக. ஞாளம் – நாளம். மொகை – மொக்கு. தெளி – தேன். உகளும் – துள்ளுகின்ற. கட்செவி – பாம்பு. குக்குடதுவச – கோழிக்கொடியையுடையவனே. "கோழியோங்கிய வென்றடு விறற்கொடி" முருகாறு. பரி – வாகனம். உகைபவ – செலுத்துபவனே.

7. கங்குல் – இருள். கடுத்து – ஒத்து. பறம்பு – காடு உந்திய – செலுத்திய. வெண்கரி – ஐராவதம். கவுள்கண் – கதுப்பில். இவர் – பொருந்திய. பங்கம் – சேறு.

8. மன்றல் — வாசனை. அளைந்து — கலந்து. பணை — வயல். மாழை — பொன்போன்ற சுளை. வருக்கை — வேர்ப் பலா. இலாங்கலி — தென்னை. பூகம் — கமுகு. புன்றலை — இளந்தலை. வருடி — தடவி. பூசல் — போர். மதன் — மன்மதன். செழும்பி — செழித்து. தடிந்த — அறுத்த.

9. கண்டல் — தாழை. கடி — வாசனை. பராகம் — மகரந்தப்பொடி. தாது — பூந்தாது. கெழுமி — நிறைந்து. முண்டகம் — தாமரை. தேறல் — தேன். எனல் இடி — தினை மா. சுரும்பர் — வண்டு. பாண் — இசை. ஓதை — ஒலி. முழா — மத்தளம். கொண்டல் — மேகம். தண்டலை — சோலை.

10. மாகம் — வானம். பொங்கை — மரப்பொந்தில். மகன்றில் — மகன்றில் பறவை. இளஞ்சினையூடு — இளங்கிளை களில். பாகு — வெல்லப் பாகு. பொய்தல்— கூட்டம். ஆவ ணம் — வீதி. உலாவரல் —பவனி வருதல். அகம் —மனம். கோகனகம் — தாமரை மலர்.

10. சிறுதேர்ப் பருவம். சிறுதேருருட்டி விளையாடு தல். இருபத்தொன்றாந் திங்களில் நிகழ்வது.

1. தேர் விழா. ஓல் — ஓலம். வாடைவந்து — வாடைக் காற்று. காட்டு — செத்தை; குப்பை. தோரணம் — தொங் கல். கேதனம் — கொடி. தாமம் — மாலை. துணையுற — சம மாக. நாற்றி — தொங்கவிட்டு. பழுக்காய்க் குடும்பு — கமுகங் குலை. அரம்பை — வாழை. நிறீஇ — நிறுத்தி. தமனியம் — பொன். தூக்கம் — ஆபரணத் தொங்கல். கொடி — பசுங் கொடி.

2. அம்பிகை குழவிக்குப் பாராட்டி நீராட்டுதல்,
மதர் — மதர்த்த; அழகிய. நோக்கு — பார்வை. உடை ந்த — தோற்ற. வெஃகும் — விரும்பும். புன்முரல் — சிறு பல்; புன்சிரிப்பு. நகுதலை — விளங்குகின்ற தலையோடு. அளி த்து — கருணைபுரிந்து. அபயம் — பயமின்மை. சூது — சூதா டுகருவி அடர்ந்து — வருத்தி. முச்சி — உச்சி. பண்டி — வயிறு. சுண்ணம் நீர் — வாசனைப் பொடி கலந்த நீர்.

3. இறைவன் திருநடனச் சிறப்பு. மட்டு — தேன். அவிழ்த்து — விரியப்பெற்று. இதழி — கொன்றை மலர். செவ்

வான் — செவ்வானம். அறல் கொழித்தது வெய்ப்ப — மழைநீரைப் பொழிந்ததுபோல. மடங்கல் ஊர் — சிங்கத்தை வாகனமாக ஊர்கின்ற. பயிரவி — காளி. நட்டம் — நடனம். ஞான்று — காலத்தில். மாதிரம் — திசை. ஆகண்டலன் — இந்திரன். படம்பை — படத்தில் பையையுடைய. திளைத்து — அசைந்து. அண்ட நாடு காண — வானநாட்டிலுள்ளோர் காணுமாறு. இட்டமிட்டு — பிரியம்வைத்து.

4. பூந்துறை நாடன். தொடர் — மாலை. துயல்வரும் — அசைகின்ற. மைக்கண் — மைதீட்டிய கண். மதிக்கவிகை — சந்திரனையொத்த குடை. மதவேள் — மன்மதன். கறுத்து — கோபித்து. புங்கம் — அம்பின் அடிப்பாகம். பகழி — மலரம்பு. பூசல் — போர். பெருநெறி — பெருமையாகிய நல்வழி. விலங்காது — தவறாமல். மனுநெறி — நீதிநெறி·

5. மகளிர் ஆடவரை இகழ்ந்து நகையாடல்.

செய்க்கண் — வயலில். சரோருகம் — தாமரை. தாழைக் குடும்பு — தென்னங் குலையை. சூல்பிணவு — கருப்பமுடைய பெண் குரங்கு. மந்தி — ஆண் குரங்கு. மூரி — பலம். திமில் பகடு — எருமைக் கடா. அலம்விட்டு — கலப்பையைவிட்டு. இக்குப்படப்பை — கரும்புவயல். பண்ணை — வயல். நாறு — நாற்று. கடைசிமார் — மருதநிலப் பெண்கள். இழுக்கி — இகழ்ந்து. நல் ஓதை — நல்ல ஆரவாரம். பசுங் குழவி — இளங் குழந்தை.

6. ஊடலும் தணித்தலும்.

பாவை — பெண். சேடி — தோழி. அருகு உற — பக்கத்தில் நெருங்க. இருகுவளை — இரண்டு கருங் குவளை மலர்களை. தாமரை மூசும் — தாமரை மலர் மொய்த்த: செய்கையின் — செய்கைபோல. புதைகொள்ள — இரண்டு கைகளினாலும் மறைத்துக்கொள்ள. காவல் — வஞ்சனையால். ஆடகம் — பொன். செங்கை — சிவந்த கைகளினால். இதுயார் — இதனைச் செய்தவர் யார்? புலரா — வாடிநின்ற. ஆயிழை — மனைவி. ஊடல் திருத்திடும் — பிணக்கைத் தீர்த்துச் சீர்படுத்துகின்ற.

7. மகளிர் வள்ளைப்பாட்டுப் பாடுதல்.

குழைபணி — காதணி. தரளம் — முத்து. துயல்வரும் — அசைகின்ற. நிலவு —நிலாவினொளி. களபம் — சுண்ணச் சாந்து. செக்கர் —செந்நிறம். மதாணிமணி — மார்புப் பக்கத்திலுள்ள இரத்தினம். வெயில் — சூரிய வொளி. உமிழ— கக்க விழாவணி — விழாச் சிறப்பு. வாங்கு — வளைந்த. மருங்குல்

— இடப்பு. துவண்டிட — வருந்த; வளைய. வள்ளை — உலக்கைப் பாட்டு. வளம் — அழகு. மன்றல் இயற்றிய — கலியாணம்செய்த. ஆர்கலி — கடல்.

8. தாமரை மலரில் அன்னம்.

பாசடை — பசுமையான இலைகள். முள் அரை — முள்ளையுடைய அடித்தண்டு. காளம் — தண்டு; உள் துளை. அமளி — மெத்தை. பார்ப்பு — குஞ்சு. வெம்சிறையோடு — விருப்பமாகிய சிறகினுள். துயிற்றிய — தூங்கச்செய்த. மடவன்னம் — பெண்ணன்னம். அரசு நிலை இய — அமர்ந்திருக்கின்ற. பெரும்பான்மை — சிறந்த தன்மை. தூசி — போர். முடங்கு உளை — வளைந்த பிடரிமயிர். ககனம் — வானுலகம். வல்லி — கொடி. துடங்கி — கட்டுண்டு. நுடங்கிய — அசைந்த. பச்சூசல் — பசுமையாகிய ஊஞ்சல். உகை — மேலெழுந்தாடுகின்ற.

9. வசந்த விழா. வரை — மலை. குடுமிக்கண் — உச்சியில். தவழ — தத்திச்செல்ல. கால் கொடு — தொடங்கி. முற்றி — முதிர்ந்து. ஆவணம் — வீதி. மண்டி — அடைந்து சாயு — அழகு. பொங்கர் — சோலை. முகை விண்டு — அரும்பு விரிந்து. மனோசன் — மன்மதன். குங்கும பங்கம் — குங்குமச்சேறு. கொழிக்கும் — கொப்பளிக்கும், சிவிறி — நீர் வீசுந்துருத்தி.

10. கோபுரச்சிறப்பு. ஞாயிறு — சூரியன். சினகரம் — கோபுரம். அணவுதொறும் — கிட்டுந்தோறும். சுடர் — ஒளி. கால் — கக்குகின்ற. குடவிம்பம் — குடத்தின் பிரதிபிம்பம். இளகி — தழைத்து. மணிச்சுடிகை — மாணிக்கத்தை உச்சியில் உடைய. பணிசன் — பாம்புகள் ஈன்ற. பிரபை — ஒளி. செம்மணி — சிவந்த மாணிக்கங்கள். எழுகுரவோர் — எழு சிவாச்சாரியார்கள். சூளிகை — மாடம். கலம்பரி — ஆபரணத்தைத் தாங்குகின்ற. பண்தெரி அரங்கு — இசைபயில் சாலை. மேல் நிலம் — உப்பரிகை.

வெண்பா. கொங்கார் நறுஞ்சுனையுங் கோவேந்தர் கைச்சிலையுஞ்
சங்காரஞ் செய்யுந் தனிகையே — தெங்காருஞ்
செங்கோடைக் கண்ணியான் சேவிப்பச் சென்றிருக்குஞ்
செங்கோடைக் கண்ணியான் சேர்வு.

செங்கோடைக்கண் — திருச்செங்கோட்டில். கண் + யான் — கண்ணியான். செங்கோடை — செங்காந்தட்பூ. கண்ணியான் — மாலையணிந்தவன். சேர்வு — இடம். நறுஞ்சுனை; சங்கு ஆரம் செய்யும் — சங்குப்பூச்சி முத்தை ஈனும். சிலை — வில். சங்காரம் — விலங்குகளைச்சங்கரித்தல். தனிகை — திருத்தணிகைமலை.

குறிப்புரை முற்றிற்று.

உ

கந்தரலங்காரம்.

1. தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

2. அழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

3. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

4. கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா தலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

5. மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

6. சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலித்த மாயனுஞ் சக்கரா யுதமும் பணிலமுமே.

7. செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிறைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

பிழை திருத்தம்.

பருவம்	செய்யுள்	பிழை	திருத்தம்
செங்கீரை	6	பாக்குர	பாக்கு
,,	7	சிறுகாற்பொசி	சிறுகாற்கொசி
,,	8	புன்னவக	புன்னகை
தாலம்	8	முப்பல	முடப்பல
,,	10	வரிதா	வறிதா
சப்பாணி	3	விகிருன்றம்	வகிருன்றம்
,,	8	பயிற்றிடவேழ்	பயிற்றிடமேழ்
,,	9	உதைக்கெழு	உதைக்கெழு
,,	9	தருகட்	தருகட்
வாரானை	1	கடமாடுங்கோதை	கடமாடிடுங்கோதை
,,	கடைசியில்	ஆகச்செய்யுள் 98.	ஆகச் செய்யுள் 68.
அம்புலி	4	கோட்டுமேதி	மோட்டுமேதி
,,	4	வேண்டியனுன்	வேண்டினுன்
,,	8	கவரிதழ்	கவிரிதழ்
சிற்றில்	2	சூழிகை	சூளிகை
சிறுபறை	6	மேனீ	மேனீனி
,,	6	போகில்	போதில்
சிறுதேர்	2	மறையுங்குதலையும்	மறையுநகுதலையும்
,,	5	உழுனர்	உழுநர்
,,	7	துவல்வரு	துயல்வரு

பிரதி பேதம்.

பாயிரம்	1	புக்கொளிப்ப வவிர்	புக்கொழிப்பவிர
,,	1	கவிகளுடோறும்	கவிகாடோறும்
காப்பு	8	மரர்முன்	மமரர்முன்
முத்தம்	10	கொண்டருவண்ட	கொண்டருவுண்ட
வாரானை	7	உருபணி	உறுபணி
,,	8	மிகுதுனி	மகிழ்துனி
,,	9	ஒளிகெழு	ஒலிகெழு
சிற்றில்	3	வெயவாகு	வெய்யவாகு
,,	6	மாழ்கு	மாழ்கி
சிறுபறை	9	மொய்த்தனலேனலிடி.	மொய்த்தனவேனலிடி
சிறுதேர்	6	உறுங்காவால்	உறுங்காவால்.

கொங்குமண்டல சதகம்.

நெடுவா ரிதிபுடை சூழுல கத்தில் நிமலியுமை
யொடுவாகு பெற்ற திருமேனி காணி யுயிர்கட்கெல்லாம்
நடுவாக நின்ற பரஞ்சோதி தானத்த நாரிச்சிவ
வடிவா னதுந்திருச் செங்கோடு சூழ்கொங்கு மண்டலமே.

குறிப்பு:-

"திருச்செங்கோடு, ஈரோடு–சென்னை பெரிய புகைவண்டிப் பாதையில் சங்ககிரி துர்க்கம் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது. பஸ் வசதி உண்டு. இத் தாலுக்கா சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தது."

அம்பிகா பிரஸ், ஈரோடு.